விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 096 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 11 ஞாயிற்றுக்கிழமை (24.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## தையிட்டி விகாரைக்கு எதிராகப் போராட்டம்



19

## நீதிமன்ற அழைப்புக்கு காத்திராமல் உண்மையைப் பகிரங்கப்படுத்துக


### ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் மைத்திரிக்கு மகிந்த ஆலோசனை



(கொழும்பு)
நீதிமன்றம் அழைப்பு விடுக்கும் வரை காத்துக் கொண்டிருக்காமல் தெரிந்த உண்மையை மைத்திரிபால சிறிசேன பகிரங்கப்படுத்த 19



# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில்
# மைத்திரியின் சர்ச்சைக் கருத்து
## விசாரணைகளை ஆரம்பிக்குமாறு உத்தரவு



(கொழும்பு)
உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன வெளியிட்ட கருத்துத் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் உத்தரவு பிறப்பித்துள்ளார்.
(19ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் சீனா விஜயம்



19

## பால்மாவின் விலை குறைப்பு

(கொழும்பு)
எதிர்வரும் ரமழான் மற்றும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இன்று முதல் ஒரு கிலோ கிராம் பால் மாவின் விலை 150 ரூபாயினால் குறைக்கப்படவுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் 19

## ராஜபக்ஷக்களுக்கு நான் எதிரி அல்ல; அவர்களும் எனக்குப் பகைவர் அல்ல
### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)
"ராஜபக்சக்களுக்கு நான் எதிரி அல்ல. அவர்களும் எனக்குப் பகைவர் அல்ல. அவர்களிடமிருந்து நான் பிரதமர் பதவியையோ - ஜனாதிபதிப் பதவியையோ பறித்தெடுக்கவில்லை. நாடு எதிர்நோக்கிய நெருக்கடியான கட்டடத்தில் ராஜபக்ஷக்கள் எனக்குப் பதவிகளைத் தந்து ஒதுங்கி நின்றார்கள்." 19

## மகாநாயக்க தேரர்களிடம் கோட்டாபயவின் நூல்



04

## வண்ணை வேங்கடேஸ்வரருக்கு இன்று கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)
வண்ணையம்பதி ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான (பெருமாள் கோவில்) புனருத்தாரண மகா கும்பாபிசேகம் இன்று இடம்பெறவுள்ளது 19

### காரைநகரில் கஞ்சாவுடன்
## 2 கடற்படையினர் உள்ளிட்ட மூவர் கைது

(யாழ்ப்பாணம்)
காரைநகர் பகுதியில் கேரள கஞ்சாவுடன் இரண்டு கடற்படையினர் உள்ளிட்ட மூவர் நேற்று பொலிஸ்ரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
சந்தேகநபர்களிடமிருந்து 4 கிலோ 400 கிராம் கேரள கஞ்சா இதன்போது கைப்பற்றப்பட்டது. 19

### அராலி மத்தியில்
## நிமோனியாக் காய்ச்சலால் 5 வயது சிறுவன் மரணம்

(கரணவாய்)
நிமோனியாக் காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஐந்து வயதுடைய சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.
அராலி மத்தி அராலியைச் சேர்ந்த கிருபாகரன் சிலக்சன் (வயது-5) என்ற சிறுவனே உயிரிழந்தவராவான்.
நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குத்தகைக்கு உண்டு

**யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு முன்பாக**

ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள எமது சங்க கட்டிட தொகுதியில் 1 ஆம் மாடியில் (12x32 அடி நீளமான) ஒரு கடை வாடகைக்கு உள்ளது. 2 ஆம் மாடியில் 3000 சதுர அடி பரப்பளவு கொண்ட கட்டிடம் நீண்ட கால குத்தகைக்கு விடப்படும். இக் கட்டிடத்தில் ரியூட்டரிகள், பயிற்சி நிலையங்கள், தங்குமிட வசதிகள், தனியார் வைத்தியசாலைகள் போன்ற தேவைக்கு ஏற்றவாறு வடிவமைக்க கூடியது. தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

யாழ் மாவட்ட பேக்கரி, உரிமையாளர் சங்கம், 183, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

செயலாளர்
**021 222 3814**
**077 665 3323**

(C-8595)

## விற்பனைக்கு

CAR (A- Star)
அலுமாரி - தகரம்
துவிச்சக்கரவண்டி - (லுமாலா)
மடிக் கணனி - (HP)

**076 711 2102**
**077 542 0783**

(202)

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS** பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை WESTERN UNION MONEY TRANSFER, Ria, MoneyGram money transfer ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-8594)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு
**076 636 3378 | 076 097 3127**

## காணி விற்பனைக்கு

தனங்கிளப்பில் பூநகரி பிரதான வீதியில் இருந்து 100 மீற்றர் அருகாமையில் 8 3/4 பரப்பு காணி, சிறிய வீடு, மின் இணைப்பு மற்றும் நான்கு பக்கமும் முட்கம்பி வேலி, தென்னைகள் உள்ளடங்கியது. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
**077 220 3386**

(199)

## காணி விற்பனைக்கு

தனங்கிளப்பு கண்ணகை அம்மன் வீதியில் 3 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. நான்கு பக்கமும் முட்கம்பி வேலி, தென்னைகள், குழாய்க் கிணறு உள்ளடங்கலாக.

தொடர்புகளுக்கு:
**077 220 3386**

(199)

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள கருவாட்டுக் கடைக்கு சிங்களத்தில் கதைத்து சகல வியாபாரமும் செய்யக்கூடிய வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு :
**077 222 8312**

(200)

## கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்...

**33 வருடகால பூர்த்தியை முன்னிட்டு மலிவு விலையில் புறொயிலர், கல்பேட், ஊர்ச் சேவல், பேரன்ஸ், முட்டைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.**

- 24 மணி நேர சேவை.
- யாழ். மாவட்டம் முழுவதும் Transport இலவசம்
- முட்டை(medium) சில்லறை விலை 40/=,(medium) மொத்த விலை 39/=
  பெரியமுட்டை சில்லறை 44/=, மொத்தம் 43/=
- Halal Fresh Chicken (ஹலால் இறைச்சி)
  புறொயிலர் இறைச்சி 1,250/=
  புறொயிலர் இறைச்சி மொத்த விலை 1,100/=
- கல்பேட் 1 Kg - 1,000/=
  பேரன்ஸ் 1 Kg இறைச்சி 1,400/=
  ஊர்க் கோழி 1 Kg - 1,250/=

**New City Farm**
8,8A Sinnakadai Market, Jaffna
**021 430 3354**
**076 359 3354**

(180)

## மணிவிழாவும் பிறந்த தின வாழ்த்தும்

**24.03.2024**



திருமதி
**அருட்சோதி சிவசுப்பிரமணியம்**
SLTS-I
பயிற்றப்பட்ட
இந்துசமய ஆசிரியர்

தனது 36 வருட கல்விச் சேவையில் இருந்து இன்று ஓய்வு பெறுவதோடு தனது அறுபதாவது பிறந்த தினத்தை கொண்டாடும் எமது அம்மா முருகன் துணையால் நலமாகவும் சுபீட்சமாகவும் வாழ மனநிறைவுடன் வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

- யா/ மந்துவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை 17.08.1988- 02.02.1993
- யா/ கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 03.02.1993 - 31.12.1994
- யா/ மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை 01.01.1995 - 03.03.1998
- யா/ மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம் 04.03.1998 - 06.09.2011
- யா/ நுணாவில் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை 07.09.2011 - 01.02.2015
- யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி 02.02.2015 - 23.03.2024

Best Wishes!

வாழ்த்துவோர் :
**குடும்பத்தினர்**

(185)

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் செல்வராணி



பிறப்பு 1942.06.18 இறப்பு 2024.03.22

காரைநகர் வேதரடைப்பைப் பிறப்பிடமாகவும் கனடா Toronto ஐ வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் செல்வராணி 22.03.2024 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் அம்பலவாணரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நமசிவாயம் - லக்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் சதானந்தன் (கனடா), மஞ்சுபாசினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஏகாம்பரநாதன் (லண்டன்), சிவசக்தி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் தீபக், வினிதா, சிந்துஜா, யாதவன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் காலஞ்சென்ற சுந்தரராஜா மற்றும் தணிகாசலம், காலஞ்சென்ற புவீந்திரராஜா மற்றும் கிருபைநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவபாக்கியம், அமிர்தாம்பிகை, கமலாதேவி, விமலராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மகன் - + 1(416) 616 - 1564 (கனடா)
மகள் - + 447946275640(லண்டன்)

(0204)

தகவல் :
குடும்பத்தினர்

## காணி விற்பனைக்கு உண்டு

**புத்தூர் மட்டுவில் பிரதான வீதியோரம் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 20 அடி பாதையுடன் காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு.**

- புத்தூர் மட்டுவில் பிரதான வீதியில் இருந்து 100m இல்.
- 20 அடி பாதையுடன்
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் காணி துண்டுகள் விற்பனைக்கு உண்டு.
- 2 பரப்பு – 4 1/2 இலட்சம்
- நல்ல மேட்டுக் காணி

பார்வையிடும் நேரம் - 8.30 Am - 6.00 Pm

**076 109 8504, 076 659 0583**
**077 612 2971**

(0194)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்த போராட்டம்

**(கொழும்பு)**

**இலங்கையிலுள்ள 18 தொழிற்சங்கங்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்தில் நாடு தழுவிய ரீதியில் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது.**

நேற்று முன்தினம் நிர் வாகப் பரீட்சை திணைக்களத்தின் நிறைவேற்று அதி காரி தொழிற் சங்கத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரச நிர்வாக அதிகாரி களின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் சாதகமான பதிலினை அளிக்காத காரணத்தினாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தவிரவும் அண்மையில் பிரதமருடனான கலந்துரையாடலின் போது நிறைவேற்று அதிகாரிகள் தம்மைப் பாதித்துள்ள பொருளாதார நெருக்கடிகள் மற்றும் தொழில்சார் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக கூறப்படுகிறது.

அதன்படி எதிர்வரும், மார்ச் மாதம் 31ஆம் திகதி அரச நிர்வாக அதிகாரிகளின் கோரிக்கைகளுக்கு அமைச்சரவையில் உரிய தீர்வுகள் சமர்ப்பிக்கப்படும்.

அந்த கோரிக்கைகளுக்கு உரிய தீர்வுகள் வழங்கப்படவில்லை என்றால் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அரசாங்க நிறைவேற்று அதிகாரிகளின் குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, கல்வி நிர்வாக சேவைகள் தொழிற்சங்கம், தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப தொழிற்சங்கம், கணக்காளர் தொழிற்சங்கம், பரீட்சை திணைக்கள தொழிற்சங்கம் உள்ளிட்ட அனைத்து தொழிற்சங்கங்களின் பங்களிப்புடன் இந்த வேலைநிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சிறையிலுள்ள இந்திய மீனவர்களை விடுவிக்கக்கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் தொடர் போராட்டம்

(சென்னை)

இலங்கைச் சிறையில் உள்ள இராமேஸ்வரம் மீனவர்கள் 37 பேரை உடனடியாக விடுதலை செய்யக்கோரி நேற்று முதல் இராமேஸ்வரம் மீனவர்கள் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.



அதேவேளை கைது செய்யப்பட்ட மீனவர்களை படகுடன் விடுதலை செய்யாவிட்டால் வரும் மக்களவைத் தேர்தலை புறக்கணிக்க போவதாகவும் மீனவர்கள் தீர்மானம் நிறைவேற்றி உள்ளனர்.

மேலும் ஏப்ரல் 8 ஆம் திகதி இராமேஸ்வரம் வட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மீனவர்கள், தங்களது வாக்காளர் அடையாள அட்டை மற்றும் ஆதார அட்டை உள்ளிட்டவற்றை ஒப்படைத்து போராட்டம் நடத்த உள்ளனர்.

அதேவேளை எதிர்வரும் மக்களவைத் தேர்தலுக்குள் மீனவர்கள் படகுடன் விடுதலை செய்யப்படாவிட்டால் தேர்தலில் வாக்களிக்காமல் தேர்தலை புறக்கணிக்கப் போவதாக தீர்மானித்துள்ளனர்.

வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக இராமேஸ்வரம் மீன்பிடித்துறை முகத்தில் சுமார் 800 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லாமல் கடலில் நங்கூர□மிட்டு நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)


## காணவில்லை



சிங்கை நகர், புலோலி தெற்கைச் சேர்ந்த இராசநாயகம்- சுஜாதா (சுதா) என்பவரை கடந்த 12.02.2024 ஆம் திகதியிலிருந்து காணவில்லை. காண்பவர்கள் **078 928 5467** இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

தகவல் - இராசநாயகம் (கணவர்) (208)


# ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கத் தயார்



(கொழும்பு)

கோரிக்கை விடுக்கப்பட்டால் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கத் தயார் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, இலங்கையின் அனைத்து சமூகத்தினராலும் தமக்கு நல்ல வரவேற்பு இருப்பதாக சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி உட்பட அனைத்து அரசியல் கட்சிகளுடனும் தான் இணக்கமான நிலையில் இருப்பதாகவும் அவர் வெளிப்படுத்தினார்.

"எனக்கு எந்த கட்சியுடனும் சமூகத்துடனும் விரோதம் இல்லை. நான் எல்லோரையும் நேசிக்கும் நபர். எனக்கு வாய்ப்புக் கிடைத்தால், நான் நிச்சயமாக களமிறங்குவேன், நான் தேர்தலில் வெற்றி பெறுவேன்," என்று அவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜய சேகரவின் தலைமையில் இந்த வாரம் புதிய அரசியல் கூட்டணி ஆரம்பிக்கப்பட்டது.

'மனிதநேய மக்கள் கூட்டணி' என அடையாளம் காணப்பட்ட புதிய அரசியல் பிரிவு சுமார் 20 அரசியல் மற்றும் சிவில் சமூகக் குழுக்களைக் கொண்டுள்ளது. (நி)


## யா/விக்னேஸ்வரக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### விசேட பொதுக் கூட்டம்

| | |
|---|---|
| காலம் | :- 2024.04.07 (ஞாயிற்றுக்கிழமை) |
| நேரம் | :- காலை 10.00 மணி |
| இடம் | :- கல்லூரி கேட்போர் கூடம் |
| தலைவர் | :- திரு.வை.செல்வராசா |

கல்லூரி அன்னையின் மனிதவள, பௌதீக வள அபிவிருத்திகள் தொடர்பான முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டு விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் அனைத்து அங்கத்துவ பழைய மாணவர்களும் தவறாது கலந்து தங்கள் ஆதரவை வழங்கி உதவுமாறு தயவுடன் வேண்டுகின்றோம்

(c-8596) கி.ரவிகுமார் செயலாளர்



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த 16.03.2024 யாழ். பல்கலையின் 38 ஆவது பட்டமளிப்புவிழாவில் கலைமாணி (B.A) பட்டம் பெற்ற எமது ஆசிரியர் **திருமதி.ஜெ.அலன் விக்ரறின்** அவர்கள் மேலும் பல பட்டம் பெற்று சீரும் சிறப்புடன் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

*Congratulation Mrs.J.Alenvictorin B.A*

(203)

ஆசிரியர்கள்,மாணவர்கள், உறவினர்,நண்பர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள வீட்டு உபகரணங்கள் உடனடி விற்பனைக்கு.
(கட்டில், மேசை, Dressing Table, Dress Hanger Stand, குளிர்சாதனப் பெட்டி, Oven, 43" LED TV, SPrayer)

தொடர்பு (215)

**077 400 2382**

யாழ்.நகரம்


## மகாநாயக்க...

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ "ஜனாதிபதி பதவியில் இருந்து என்னை வெளியேற்றியதன் சதி" என்ற தனது நூலை மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர்களிடம் வழங்கினார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஸ்ரீ தலதா மாளிகைக்கு சென்று வழிபாடுகளை நிறைவேற்றிய பின்னர், தலதா மாளிகையின் தியவடன நிலமேவிடம் நூலின் பிரதியொன்றினை வழங்கியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து அன்றைய தினமே மல்வத்து விகாரைக்கு சென்று மஹாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரரின் ஆசீர்வாதத்தைப் பெற்றார். (ம-7)


## விற்பனைக்கு

### உழவு இயந்திரம் TAFE 45D1

யாழ்.நகரில் ஒரு கை பாவிப்பிலுள்ள உழவு இயந்திரம் (RH ....) பெட்டி, கலப்பை, றொட்ட வேட்டர் ஆகியவற்றுடன் விற்பனைக்கு உண்டு.
950 மணித்தியாலங்கள் மட்டுமே ஓடியது. (214)

தொடர்பு - **077 575 0882**



## வேலையாட்கள் தேவை

அச்சுவேலியில் இயங்கும் **KDM** கலர் லாப்பிற்கு

- வரவேற்பாளர் (பெண்கள்)
- அல்பம் டிசைனர்
- வீடியோ எடிற்றர்
- பனர் மெசின் இயக்குநர்
- லேசர் மெசின் ஒப்பறேற்றர்
- அல்பம் வைண்டர்

ஆண் / பெண் இருபாலாரும்

வேலையாட்கள் தேவை



தொடர்புகளுக்கு

**KDM கலர் லாப்**


சந்நிதி வீதி, அச்சுவேலி. (221)

**077 634 1239, 077 669 9451**



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127


## மரண அறிவித்தல்



## கதிர்காமு மீனாட்சி

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 2 வட்டாரம் வேலணையை வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமு மீனாட்சி அவர்கள் கடந்த 19.03.2024 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கதிர்காமு அவர்களின் அன்பு மனைவியும் கலாவதி, ஜெயக்குமார், குமணகுமார்(பிரான்ஸ்), வசந்தாவதி, சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் குமாரசூரியர், சத்தியபாலதேவி, தவச்செல்வி(பிரான்ஸ்), உதயசூரியர், மணிவண்ணன் ஆகியோரின் அன்பு மாமியாரும் தவச்செல்வன் - மனோஜா, மதிவதனி - சுவர்ணன், பைந்தமிழ்ச்செல்வன், மயூரிக்கா, முருகதாஸ் - கயல்விழி, குகந்தினி(பிரான்ஸ்), விதுஷன்(பிரான்ஸ்), தனுஷன்(பிரான்ஸ்), நிஷாந்தன், திருக்குமரன், உஜா, கௌதமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் லகீசன், ஜசிந்தன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்ற பிள்ளையம்மா மற்றும் முத்தம்மா, காமாட்சி, சரோஜினி தேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.03.2024 திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

077 328 2376 (C-8598)

தகவல்:
குடும்பத்தினர்

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் பரராஜசிங்கம் நாகேஸ்வரன்

(ஓய்வுபெற்ற அஞ்சல் உத்தியோகத்தர் - பருத்தித்துறை)

மண்ணில் : 27.09.1967 விண்ணில் : 11.02.2024

அன்புக்கோர் இலக்கணமாக
அனைவரையும் அன்பால் இணைத்து
இன்றுவரை எம்முடன் வாழ்ந்தவரே!
என்று காண்போம் இனி உங்களை
நாகதம்பிரானின் பாதங்களில் அடைக்கலமாகி
அமைதியுடன் உறங்கிடுங்கள்.

அன்னாரின் திடீர் மரணச் செய்தி அறிந்து உடன் வந்து உதவி புரிந்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றிகள். எதிர்வரும் (26.03.2024) செவ்வாய்க்கிழமை மு.ப 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: - இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்

சாரையடி,
புலோலி தெற்கு, புலோலி. (217)

தகவல் : மனைவி, பிள்ளைகள்
குடும்பத்தினர் தொ.பே : 077 982 0521

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்




திருமதி.
**அருட்சோதி சிவசுப்பிரமணியம்**
ஆசிரியர்(பயிற்றப்பட்ட இந்து சமயம்)

சேவை விபரம்

யா/மந்துவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை
17.08.1988-02.02.1993

யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
03.02.1993-31.12.1994

யா/மந்துவில் றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலை
01.01.1995-03.03.1998

யா/ மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்
04.03.1998-06.09.2011

யா/நுணாவில் மேற்கு அரசினர் த.க.பாடசாலை
07.09.2011-01.02.2015

யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி
02.02.2015-23.03.2024

அறிவில் ஜோதியாய் ஆற்றலில்
புயலாய் புலமையில் புலியாய்
கடமையில் உயிராய்
முப்பத்தாறு வருடங்கள்
சேவையாற்றி எங்கள் இதயங்களில்
இனிதே பதிவாகிய மணிவிழாக் காணும்
மாண்புறு நாளில் தங்களை
மனதார வாழ்த்தி எதிர்காலம்
சிறப்பாக அமைய வேம்படி விநாயகனை
பிரார்த்திக்கின்றோம்.

(212)

வாழ்த்துவோர்-
சேவையாளர் சங்கம்,
யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.


## ஏப்ரல் முதல்

# வெளிநாட்டவர்களுக்கு விமான நிலையத்தில் சாரதி அனுமதிப்பத்திரம்

(கொழும்பு)

இலங்கையில் சாரதி அனுமதிப்பத்திரம் கோரி விண்ணப்பிக்கும் வெளிநாட்டவர்களுக்கு ஏப்ரல் 15 ஆம் திகதி முதல் விமான நிலையத்திலிருந்து வெளியில் வரும் போதே சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமென போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

இலங்கையில் வாகனம் ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரம் தேவைப்படும் வெளிநாட்டவர்கள் ஏப்ரல் 15. ஆம் திகதி முதல் அதற்காக விண்ணப்பிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)


**G.C.E (A/L) PHYSICS CLASS**

கடந்த கால வினாக்கள் Ranjit Sir இனால் 159/1, 2 nd cross street, Jaffna இல் 25.03.24 பி.ப 3 மணிக்கு ஆரம்பமாகிறது. (205)

**0776004896**


## வேலணை பிரதேச சபை
## பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

வேலணை பிரதேச சபையினால் பிடிக்கப்பட்டு உரிமை கோரப்படாத கட்டாக்காலி பசு கால் நடையொன்று பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

**இடம் : வேலணை பிரதேச சபை தலைமை அலுவலகம்**
**காலம்: 25.03.2024 திங்கட்கிழமை மு.ப 11.00**

- ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் குறித்த இடத்தில் உரிய கட்டணத்தை செலுத்தி ஏலத்தில் பங்கு கொள்ளலாம்.
- பகிரங்க ஏலத்தில் சித்தியடைந்தோர் உடனடியாக பணத்தினை செலுத்தி உரிய பட்டியிலிருந்து உரிய அனுமதியுடன் அன்றைய தினமே ஏற்றிச் செல்லல் வேண்டும்.

தொடர்புகளுக்கு : 021 221 1505
25.03.2024
(C-8593)

திரு.தி.தியாகச்சந்திரன்,
செயலாளர்,
பிரதேச சபை,
வேலணை.

## வேலணை பிரதேச சபை
## பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல் - 28.03.2024

வேலணை பிரதேசசபைக்குச் சொந்தமான பழைய பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன. பொருட்களை அன்றைய தினமே காலை 9.00 மணி முதல் பார்வையிட முடியும் என்பதுடன் கேள்வியில் பங்குபற்றுபவர்கள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி மீளளிக்க முடியாத கேள்விவைப்புப் பணமாக ரூபா 500.00 இனை வேலணை பிரதேச சபையில் செலுத்திப் பற்றுச் சீட்டினை பெற்றுக் கொள்ளல் வேண்டும். கேள்வியில் சித்தியடைவோர் உரிய தொகையினை முழுமையாக செலுத்தி அன்றைய தினம் பி.ப 4.00 மணிக்கு முன்னதாக அலுவலகத்திலிருந்து பொருட்களை எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

இடம் :- தலைமை அலுவலகம்,
வேலணை பிரதேச சபை.
காலம் :- 28.03.2024 வியாழக்கிழமை
நேரம் :- மு.ப 10.00 மணி
(C-8592)

செயலாளர்,
பிரதேச சபை,
வேலணை.


இப்பொழுது யாழ்ப்பாணத்திலும்..!
**SOLA CHEMICAL COMPANY (PVT) LTD.**

மாபெரும் 50% விலைக்கழிவு..!

- ✓ கல்சியம் நீக்கி- 4L 2200 1400
- ✓ ஷாஷிங் பவுடர்-3KG 1165 900
- ✓ ரியல் மொப்பர்- 4L 2600 1400
- ✓ மாபிள்கிளீனர் - 4L 2600 1400
- ✓ சலவை திரவம்- 4L 3200 1600
- ✓ கண்ணாடி கிளீனர்-4L 2000 1100
- ✓ டொய்லட் கிளீனர்-4L 2800 1400
- ✓ டிஷ் வோஷ் - 4L 1900 950
- ✓ ஹான்ட் வோஷ்- 4L 3200 1600
- ✓ டிஷ் வோஷ் -500ML 420 210

மேலும் பல CLEANING ITEMS
(210)

NO. 576/2/C Siyabalape road, Heiyanthudawa, Makola
Reg No PV00240433
021 222 0866 / 077 7495494
288, பலாலி வீதி, கந்தரமடம், யாழ்பாணம்



## தேவை

மாவிட்டபுரம் தெல்லிப்பளை Farm இல் குடும்பத்துடன் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய 50 வயதுக்கு மேற்பட்ட ஆண் தேவை.
தோட்டம் செய்யக் காணி, சிறிய வீடு, சம்பளம் வழங்கப்படும்.
தளபாடங்களும் விற்பனைக்கு உண்டு

(211) **077 873 0129**


# இராசிபலன்

24.03.2024
பங்குனி 11, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தசி முற்பகல் 11.00 மணிவரை
பூசம் காலை 8.33 மணிவரை

சுபநேரம் -9.15-10.45 மணிவரை
இராகுகாலம்-4.45-6.15 மணிவரை
பங்குனி உத்தரம், பூரணை விரதம்
சித்தார்த்தம் குருத்தோலை ஞாயிறு

சந்திராஷ்டமம்
திருவோணம்

**வளவன்**




மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.




நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைத்துக் கொள்ள வேண்டிய நாள், பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும்.




பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், காலைப் பொழுதில் கலகலப்பான செய்திக் வந்து சேரலாம், கனவுகள் நனவாக கண்ணனை வழிபட வேண்டிய நாள்.




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.




அந்நிய தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், கௌரவமான நாள்.




கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள்.




பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள்.




பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.




குடும்ப ஒற்றுமை கூடும், புதிய பொருட்சேர்க்கையுண்டு, செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.




சொந்த பந்தங்களின் வருகையால் சிரித்து மகிழ்வீர்கள், வழிபாடு விருப்பத்தை நிறைவேற்றும், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**ஆயிரம் முறை தோற்றாலும் மீண்டும் முயன்று பாருங்கள்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் தெரிவுகளின் தேசிய மட்ட தெரிவுகள் 09.12.2023 அன்று கொழும்பு இராமகிருஸ்ண மிஷனில் நடைபெற்றது. அத்தியடி சிதம்பர நடராஜா அறிநெறிப்பாடசாலை மாணவி எஸ்.அபிநயா பேச்சுப்போட்டியில் முதலிடம் பெற்றுள்ளார்.

# அரச நடனவிழா-2024

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அரச நடன விழா-2024 இற்கான போட்டிகளிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

எமது பிரதேசத்திலுள்ள நடனத்துறையில் ஆர்வமுள்ள பாடசாலைகள் மற்றும் அழகிய சிறுவர் சமூகங்களினைச் சேர்ந்த மாணவர்கள் இப் போட்டியில் பங்குபற்றலாம்.

போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 30.04.2024 ஆகும். போட்டிக்கான சுற்று நிருபத்தினையும் விண்ணப்பப்படிவத்தினையும் பிரதேச செயலக கலாசாரப்பிரிவில் பெற்றுக் கொள்ளலாம் என நல்லூர் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (நி)



பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் திடீர் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவிற்கான புதிய கட்டடம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 160 | 160 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 240 | 300 |
| தக்காளி | 150 | 100 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 150 | 200 |
| கோவா | 300 | 350 | 360 | 400 |
| கரட் | 300 | 400 | 450 | 450 |
| பூசணி | 200 | 160 | 180 | 160 |
| புடோல் | 150 | 150 | 160 | 150 |
| வாழைக்காய் | 180 | 180 | 150 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 600 | 600 | 550 | 550 |
| பாகற்காய் | 400 | 300 | 350 | 300 |
| வெண்டக்காய் | 200 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | 200 |
| பயற்றங்காய் | 300 | 300 | 280 | 300 |
| லீக்ஸ் | 350 | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 300 | 250 | 300 | 300 |
| கறிமிளகாய் | 400 | 300 | 350 | 400 |
| முருங்கைக்காய் | 800 | 1000 | 800 | 1000 |
| போஞ்சி | 400 | 200 | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 160 | 180 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 80 | 80 |
| தேசிக்காய் | 200 | 200 | 150 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 80 | 80-120 |
| இராசவள்ளி | 400 | 400 | 400 | 400 |
| வெங்காயப்பூ | 350 | 150 | 200 | 300 |
| முள்ளங்கி | 100 | 100 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 50 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | — | 100 | — |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3069

Search for people, places and things

### தனுசியன்




### கஜானா




### விசாகா




### கணேஸ்




### மிலக்சி




### திவானுயா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் [illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் வண்ணை

# ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

## புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ

# மஹா கும்பாபிஷேகப் பெருவிழா -2024

**24.03.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.09 மணி முதல் 11.21 மணிவரை**



### ஆசியுரை

கலியுகத்திலே வைணவ ஆகம சம்பிரதாயப்படி வேங்கடேசனாக அவதாரமெடுத்து அடியார்களுக்கு இப்பூவுலகில் நல்ல வண்ணம் வாழ்வதற்குத் தேவையான பதினாறு செல்வங்களையும் வாரிவழங்கி ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக யாழ்ப்பாணம் வண்ணையம்பதியில் வேங்கடேச வரதராஜப்பெருமாள் என்னும் திவ்யநாமம் தாங்கி வீற்றிருந்து அருள் பாலிக்கிறார். அவரது திருவருட் கருணையினால் கடந்த இருபது வருட காலத்தின் பின்னர் சோபகிருது வருடம் பங்குனி உத்தர நன்னாளில் காலத்திற்கேற்ப முக்கியமான பல திருப்பணிகள் செய்யப்பெற்று பலவித வர்ணங்கள் தீட்டிப் புதுப்பொலிவுடன் மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மனமகிழ்வடைகிறேன். இவ்வால யத்தின் கருவறையிலே நான்கு விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. ஆதிவேங்கடேசர் எனப்போற்றப்படும் பெருமாள் வேங்கடேசர்க்குரிய திருவுருவ அமைப்புடன் வீற்றிருக்கிறார். இவர் ஆதிகாலத்தில் தலவிருட்ஷமான பலாமரத்தடியில் வைத்து வழிபடப்பட்டவராவர்.

மேற்படி நடைபெறுகின்ற கும்பாபிஷேக நன்னாளிலும் தொடர்ந்து நடைபெறுகின்ற நித்ய உற்சவ பூஜா கைங்கர்யங்களையும் பக்தகோடிகள் யாவரும் வந்து தரிசனம் செய்து பேரானந்தப் பெருவாழ்வு வாழ வேண்டும் என்று மனதார வேங்கடேசன் பாதமலர் வணங்கி நல்லாசி கூறிப் பிரார்த்திக்கிறேன்.

இரா.ரமணீதரக்குருக்கள்,
பிரதிஷ்டா பிரதமகுரு,
சிவாகம கிரியாபானு தேவஸ்தானம் பிரதமகுரு.



### வாழ்த்துச் செய்தி

வைணவத்தின் முழுமுதற் பொருளாக விளங்கும் ஈழத்துத் திருப்பதி எனப் போற்றப்படும் அருள்மிகு வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் அமர்ந்து மக்களின் துன்பங்களைப் போக்கி அருள் பாலிக்கும் ஸ்ரீ வேங்கடேசனின் குடமு முக்கு திருவிழா காண விருபதை முன்னிட்டு அவரை உணர்வு பூர்வமாக தினமும் வழிபடும் பக்தன் என்ற வகையில் மட்டற்ற மகிழ்வடைகினறேன். இலங்கையின் வடபுலத்தில் யாழ் குடாநாட்டில், யாழ் நகரில் வண்ணையம்பதியில் அமைந்துள்ள இவ்வாலயம் ஏறத்தாழ கி.பி 14ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றது.

மஹாவிஷ்ணு மூர்த்தியே வரம் அருளும் வரதராஜப் பெருமாளாக ஸ்ரீதேவி பூமாதேவி சமேதரராகக் காட்சி தருகின்றார். இவரையே தேவாதிராஜன் என்றும் தேவராஜன் என்றும் போற்றுவார். அடியார்களின் குறைகளைத் தானே அறிந்து தீர்க்கும் கருணைக்கடலாக இருக்கும் மூர்த்தி. வரம் அருளும் தெய்வங்களுக்கெல்லாம் ராஜாவாக இருப்பதனால் வரதராஜன் எனப் போற்றப் படுகின்றார்.

இவ்வாலயத்தின் கும்பாபிஷேகத்தை சிறப்புற நடாத்து வதற்கேற்ற வகையில் பாலஸ்தானம் செய்த காலம் முதல் மீண்டும் மீள் உருவாக்கம் செய்வதற்காக அரும்பாடுபட்ட மகா சபையினர், நிர்வாக சபையினர் மற்றும் சிற்பவல்லுநர்கள் ஏனைய வகையில் தமது ஆக்கபூர்வமான பணிகளை நிறைவேற்றிய அனைவருக்கும்மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு குடமுழுக்குத் திருவிழா மிகவும் சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு எல்லாம் வல்ல வண்ணை ஸ்ரீ வேங்கடேச வர தராஜப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து நிற்கின்றேன்.

திரு. எஸ்.சுதர்சன், பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.



### வாழ்த்துச் செய்தி

திருவளருளும் வண்ணையம்பதியில் எழுந்தருளிக் காட்சி தரும் வைணவத்தின் முழுமுதற்பொருளாக விளங்கும்அருள் திரு ஸ்ரீ வேங்கடேசத் திருத்தலம் வைணவம் சார்ந்த வைணவ ஆகம விதிமுறைகளுக்கு இணங்க யாழ்நகரில் ஏறத்தாழ 14ஆம் நூற்றாண்டில் அரசோச்சிய தமிழ் மன்னனாகிய குணபூசன ஆரியன், செகராசசேகரனின் காலத்தில் சிறிய உருவில் உருப்பெற்ற இவ்வாலயம் ஒல்லாந்தர் காலத்தில் புனர்நிர்மாணம் செய்யப்பெற்றது. பின்பு ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வளர்ச்சிபெற்று சகல பரிவாரமூர்த்திகளின் சந்நிதிகள் அமையப்பெற்ற நிலையில் பிரசித்தமான நவக்கிரக பீடத்தை தன்னகத்தேயுடைய ஒரு திவ்விய சேத்திரமாக விளங்கத் தொடங்கியது. அன்று தொட்டு இன்று வரை இத்தேவஸ்தானத்தை வைணவ சமயத்தைச் சார்ந்த பத்மசாலிச் செட்டிப் பிள்ளைகள் நிர்வாகப்பரிபாலனம் செய்து வருகின்றனர்.

இத்தேவஸ்தானத்தில் கடந்த 20 ஆண்டுகளாக அந்தந்த காலப்பகுதியில் நடைபெறும் மகோற்சவங்கள் யாவும் சிறப்புற நடைபெற்றுவந்துள்ளன. இந்நிலையில் 2023.06.02 மீண்டும் இத்தேவஸ்தானம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு சகல புனர் நிர்மாணத்துடனும் புதிய வர்ண வண்ணப் பூச்சுக்களுடனும் புதுப்பொலிவுடன் காட்சிதரும் வண்ணை ஸ்ரீ வேங்கடேசப் பெருமானை தரிசனம் செய்து பகவானின் ஆசியை பெற்றுக் கொள்வோம்.

தில்லைநாதன் சிவரூபன், தலைவர்,
வண்ணை ஸ்ரீ வேங்கடேச
வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்.



### வாழ்த்துச் செய்தி

செந்தமிழும் சைவநெறியும் சால்புறத் தழைத்தோங்க ஈழவள நாட்டின்கண் வைஷ்ணவ தலங்கள் பல உள்ளன. இவற்றில் ஈழத்து திருப்பதி என அழைக்கப்படும் ஸ்ரீவேங்கடேஷ்வர வரதராஜப் பெருமாள் தேவஸ்தானமும் ஒன்றாகும். இத்தலம் பண்டு தொட்டு நவக்கிரக வழிபாட்டிற்கு பிரசித்தி பெற்று விளங்குகின்றது. பிரதான வாயிலிலே ஏழு மாடங்களைக் கொண்ட நீண்டு பாய்ந்த இராஜகோபுரமும் இதன் இருபுறத்தேயும் மணிக்கோபுரங்களும் அமைந்து காணப்படுகின்றன. இராஜகோபுரத்தில் இடம்பெறும் கதை விக்கிரகங்கள் திருமாலின் தச அவதாரத்தையும் ஸ்ரீராமாயண, ஸ்ரீமத் பாகவத புராணங்களின் சில பகுதி களையும் நினைவூட்டுகின்றன.

கற்பக்கிரகத்தில் ஸ்ரீ வேங்கடேஸ்வர மூர்த்தி எழுந்தருளி உள்ளார். அவர் கையிலே சங்கை ஏந்தி இருக்கிறார். அச்சங்கானது ஊதுமிடத்து உண்டாகும் ஒலி ஓங்காரம். தன் கையில் சங்கை வைத்திருப்பதன் மூலம் தான் பிரணவப் பொருள் என்பதை அரங்கன் அறிவுறுத்துகின்றான். இத்தகு பெருமைகளைக் கொண்ட நாராயணன் யாழ் வண்ணையம் பதியிலே எழுந்தருளி அருள் பாலிக்கின்றான்.

எம் பெருமானை சூழ ஆழ்வார்களுடைய திருக்கோவில், ஸ்ரீ மகாலட்சுமி, நந்தகோபாலர், ஸ்ரீராமர், ஆண்டாள், ஆஞ்சநேயர், நவக்கிரக பீடம் ஆகிய பரிவார மூர்த்திகளும் அழகிய திருக்கோவிலில் இருந்து அருள் பாலிக்கின்றனர். இத்தகு பெருமைகளை உடைய ஈழத்துத் திருப்பதியானுக்கு இன்று (2024/03/24 ) ஞாயிற்றுக் கிழமை குட நீராட்டு விழா நடைபெறுகின்றது.

செந்நாப்புலவர். வர்ணணைக் கலாநிதி,
மதுரகவி. காரை. எம். பி. அருளானந்தன் MA.



### எமது கோவில்

ஈழத்திருநாட்டின் வடபால் யாழ் குடாநாட்டில் வண்ணை நகரின் தென்பகுதியில் அமைந்த திவ்ய திருத்தலமே ஈழத்து திருப்பதி எனப்போற்றப்படும் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம். இற்றைக்கு சுமார் அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் நெசவுத்தொழிலை குலத் தொழிலாகக் கொண்ட பத்மசாலி பரம்பரையினரால் சிறியதாக ஆரம்பிக்கப்பட்ட இத்திருத்தலம் இன்று இலங்கையின் மிகப்பிரதான வைணவ ஆலயமாக ஏழு தளங்களையுடைய வானளாவிய இராஜகோபுரத்தையும் தெற்கு வாசலிலே ஸ்ரீரெங்கநாதருக்கு ஐந்து தளங்களையுடைய ஒரு கோபுரத்தையும் தன்னகத்தே கொண்டு மிளிர்கிறது.

பல வளர்ச்சிப் படிகளைக்கொண்ட இத்திருத்தலம் செல்வச்செழிப்புடன் காணப்பட்ட பத்மசாலி பரம்பரையினரால் நன்கு பராமரிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த ஒரு தசாப்த காலமாக நடைபெற்று வந்த பாரிய கட்டுமானப்பணிகள் வேங்கடேசன் அருட் கடாட்ஷத்தினால் இனிதே நிறைவுற்ற நிலையில் இவ்வாண்டு பங்குனி 11ஆம் நாள் (24.03.2024) எம்பெருமானுக்கு குடமுழுக்கு பெருவிழா நடைபெறும் நிகழ்வு எம்மையெல்லாம் மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தியுள்ளதென்றால் அது மிகையாகாது.

பஞ்சநாதன் ஜெயகிருஷ்ணா, பொருளாளர்,
வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்
பெருமாள் தேவஸ்தானம்.

"ஈழத்து திருப்பதியான்" குடநீராட்டு நேரடி அஞ்சல்
24.03.2024 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்
யாழ்ப்பாணம் வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள்
ஆலய கும்பாபிஷேகம் ஓம் தொலைக்காட்சியில் நேரடியாக
ஒளிபரப்பப்படவுள்ளது. நேரடி ஒளிபரப்பு
ஒழுங்கமைப்பையும், நேர்முக வர்ணனையையும் மதுரகவி



### வாழ்த்துச் செய்தி

அண்டசராசரமெங்கும் நிறைந்து விளங்கி அனைத்து உயிர்களையும் காத்து அருள்புரியும் ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள் பாதம் பணிந்து நடக்கவிருக்கும் கும்பாபிஷேக மலரில் எனது பதிவும் இடம்பெறுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின் றேன்.

இலங்கையில் வைணவ வழிபாடானது வரலாற்றுப் பழமையுடையதாகும். யாழ் குடாநாட்டில் வண்ணைஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில், வல்லிபுர ஆழ்வார் கோவில், பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவில் என்பன மிகவும் தொன்மைவாய்ந்த ஆலயங்களாகும். இவ்வாலயங்களின் அமைப்பு மற்றும் பூசை முறைகள் என்பன எமது பிரதேசத்தின் பண்பாட்டு விழுமியங்களுக்கு உட்பட்டதாகவும் வைணவ சம்பிரதாயங்களை தன்னகத்தே தனித்துவமாக கொண்டுள்ளதாகவும் காணப்படுகிறது. இவ்வாலயங்களில் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயமும் மிகவும் சிறப்புவாய்ந்த பலநூற்றாண்டு பழமைவாய்ந்த ஏறத்தாழ கி. பி. 14ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் ஸ்தாபிக்கப்பட்ட ஒன்றாகும். வண்ணையம்பதியில் எழுந்தருளிக் காட்சிதரும் வைணவத்தின் முழுமுதற்கடவுளான ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தனது பக்தர்களை காத்தருள பல அற்புதங்களையும் அதிசயங்களையும் நிகழ்த்தி தென்னிந்திய திருப்பதி தேவஸ் தானத்தின் ஐதீகங்களை பின்பற்றும் ஆலயமாகவும் எழுந்தருளி இருப்பது எம்மண்ணிற்கே உரித்தான பெருமைக்குரிய அம்சமாகும்.

இவ்வாண்டு நடைபெறும் கும்பாபிஷேக நிகழ்வும் அனைத்து மகாசபை உறுப்பினர்களின் ஒத்துழைப்போடும் அடியார்களின் ஒத்துழைப்போடும் எம்பெருமான் ஆசீர் வாதத்தோடு இன்று இனிதே நடைபெறுகின்றது. இந்த உன்னதமான பெருவிழாவில் அனைத்து உயிர்களிற்கும் பெருமாளின் அனுக்கிரகத்தை வேண்டிநிற்பதோடு எம்பெரு மானுக்கு தினமும் நடக்கவேண்டிய திருவாராதனைகள் எவ்வித குறையுமின்றி மிகச்சிறப்பாகக் காலம் காலமாக நடைபெற்று வேங்கடேசப்பெருமானின் அருளாட்சியுடன் எங்கும் அன்பும் அமைதியும் மகிழ்வும் நிலவப் பிரார்த்திக்கின்றேன்.

பட்டாபிராம் ரிஷிகேசன், செயலாளர்,
வண்ணை ஸ்ரீ வேங்கடேச
வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்.

(சி-8590)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 428
Viber 076 636 3378


# ஆலடி மாநாடு



## கடமைநிறைவேற்று அதிபர்களின்ர தலையில மண்ணைக் கொட்டிய வடக்கு நிர்வாகம்

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். ஓய்வுநிலை அதிபர் கந்தையா . பேரம்பலம் மாஸ்ரர் காலமாகிவிட்டார் என்ற செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைகின்றோம்.

ஆசிரியர், அதிபர், கோட்டக்கல்விப் பணிப்பாளர் என கல்விப் புலத்தில் பல பணிகளை ஆற்றி ஓய்வுபெற்ற பேரம்பலம் மாஸ்ரர் தனது ஊரான உசன் கிராமம் பற்றிய வரலாற்று நூலை எழுதியவர். ஓர் உன்னத மனிதராக வாழ்ந்த அவரின் ஆத்மா சாந்தியடைய இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:-** அது சரி, வடமாகாணத்தில பணியாற்றின கடமை நிறைவேற்று அதிபர்களின் பதவிகளை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் வெறு தாக்கி அவர்களின்ர இடங்களுக்குப் புதிய அதிபர்களை நியமித்தவரல்லோ. இப்ப நிலைமை எப்படி இருக்குது.

**மூப்பர்:-** ஊர் முழுக்க அதுதானே இப்ப கதை. தரம் பெற்ற அதிபர்கள் இல்லாத நேரத்தில அதிபர் பொறுப்புக்களை ஏற்று பாடசாலைகளைச் சிறப்பாக இயக்கின கடமை நிறைவேற்று அதிபர்களை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு கறிவேப்பிலையைப் போல பயன்படுத்தி விட்டு தூக்கி எறிஞ்சு போட்டுது எண்டு சனங்கள் கதைக்கினம்.

**வாத்தியார்:-** வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு எண்டு ஒட்டுமொத்தமாகச் சொல்லி முடிக்கக் கூடாது. இந்தப் பிரச்சினைகள் முன்பும் வந்தது தான். ஆனால் எந்தக் காலத்திலும் கடமை நிறைவேற்று அதிபர்கள் தேவை எண்ட அடிப்படையில அப்ப இருந்த செயலாளர்கள் நிலைமையைச் சுமுகமாக்கிக் கொண்டு போய்ச்சினம்.

ஆனால் இப்ப கடமை நிறைவேற்று அதிபர்களைத் தூக்கி எறிந்திருக்கினம் அவ்வளவு தான்.

**விதானையார்:-** ஏன் வாத்தியார் இந்த விடயம் தொடர்பில வடக்கு மாகாண ஆளுநரின்ர கவனத்திற்குக் கொண்டு போகல்லயோ.

**வாத்தியார்:-** ஏன் கொண்டு போகல்ல. வடக்கு மாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கம் இந்த விடயத்தை ஆளுநரிடம் கொண்டு போயிருக்குது. அதற்கு ஆளுநர், தன்னால எதுவும் செய்ய முடியாது எண்டு சொல்லிப்போட்டார்.

தேவையெண்டால், மத்திய கல்வி அமைச்சரிட்ட இருந்து கடிதத்தை வாங்கிக் கொண்டு வாங்க. அதுக்குப் பிறகு பார்ப்போம் எண்டு ஆளுநர் கூற, கடமை நிறைவேற்று அதிபர்கள் மத்திய கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவைச் சந்தித்திருக்கிறார்கள்.

**சாத்திரியார்:-** அப்ப கல்வி அமைச்சர் என்ன சொன்னவராம்.

**வாத்தியார்:-** இலங்கையில ஒரு மாகாணமும் கடமை நிறைவேற்று அதிபர்களைப் பதவி நீக்கம் செய்யல்ல. உங்கட மாகாணம் மட்டும்தான் உங்கட தலையில மண்ணை அள்ளிக் கொட்டியிருக்குது.

உயர் நீதிமன்றத்தில கடமை நிறைவேற்று அதிபர்கள் வழக்குத் தாக்கல் செய்திருக்கினம். உண்மையில வழக்கு நிலுவையில இருக்கும்போது கடமை நிறைவேற்று அதிபர்களைப் பதவி நீக்கம் செய்வது சட்டச்சிக்கலை ஏற்படுத்தும். அதோட பொதுச் சேவை ஆணைக்குழு நல்ல முடிவைத் தராததால இனி உங்கட பிரச்சினைக்கு நீதிமன்றத்தினூடாக நல்லதொரு முடிவு கிடைக்குமென நம்புகிறன். ஆனாலும் வடக்கு மாகாணம் தவிர்ந்த மற்றைய மாகாணம் முழுவதிலும் கடமை நிறைவேற்று அதிபர்கள் தொடர்ந்தும் பணியாற்றுகினம். வடக்கு மாகாணம் உங்களைப் பதவி நீக்கம் செய்தது தொடர்பில நான் கடிதம் தருவது பொருத்தமில்லை எண்டு சொல்லிப் போட்டார்.

**சிறாப்பர்:-** அப்ப வாத்தியார் நீதிமன்றம் வழங்குகிற தீர்ப்பில கடமை நிறைவேற்று அதிபர்களை அதிபர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யுமாறு பணித்தால், அது எங்கட கடமை நிறைவேற்று அதிபர்களுக்குச் சாதகமாக இருக்கும் தானே.

**[illegible]:-** [illegible] இந்தத்தானே [illegible]மைச்சிருக்குது. வடக்கில இருக்கிற கடமைநிறைவேற்று அதிபர்களில கணிசமானவர்களுக்கு ஆசிரியராகப் போகும்படி கடிதம் கொடுத்து அவர்கள் தமக்கு வழங்கப்பட்ட கடிதத்தின்படி செயற்படத் தொடங்கி விட்டினம்.

இனி நீதிமன்றத் தீர்ப்பு வடக்கு மாகாண கடமை நிறைவேற்று அதிபர்களுக்குப் பொருந்தாது. பொதுவில கடமை நிறைவேற்று அதிபர் பதவியில இருந்து நீக்கம் செய்யப்பட்டுவிட்டால், அதோட அந்தக் கதை முடிஞ்சு போகும்.

**சாத்திரியார்:** அட சங்கதி அப்படியோ. அப்ப வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு அதிபர் சேவை உள்ளீர்ப்பு கிடைக்காமல் இருக்க வேணும் எண்டு தானே இந்தத் திருகுதாளம் நடந்திருக்குது.

**மூப்பர்:-** அப்ப இது விடயத்தில தென் பகுதியும் காய்க்குள்ள பழம் ஓடியிருக்குமோ.

**விதானையார்:-** அது தானே நான் அடிக்கடி சொல்லுறது. வடக்கு மாகாணத்தில ஒரு சிங்களவர் ஆளுநராக இருந்தால் எத்தனையோ காரியங்கள் எங்களுக்குச் சாதகமாக நடக்குமெண்டு.

இப்படி விதானையார் கூற, பண்டிதர் பரமலிங்கம் ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருந்தார். இதனை அவதானித்த கங்காணி கார்த்திகேயன்; என்ன பண்டிதர் ஐயா! கடுமையாக யோசிக்கிறியள் என்ன சங்கதி.

**பண்டிதர்:-** இல்ல, இலங்கையில எந்த மாகாணமும் கடமை நிறைவேற்று அதிபர்களைப் பதவி நீக்கம் செய்யாமல் இருக்க, வடக்கு மாகாணம் மட்டும் கடமைநிறைவேற்று அதிபர்களைப் பதவி நீக்கம் செய்தது ஏன்? அதின்ர நோக்கம் என்ன? எண்டு தான் யோசிக்கிறன்.

**வாத்தியார்:-** பண்டிதர் ஐயா, வடக்கு மாகாணத்தில 15 வருடமாகக் கடமை நிறைவேற்று அதிபர்களாகக் கடமையாற்றியவர்களின்ர பதவியும் பறிக்கப்பட்டிருக்குது. அதிலும் கடசியாக நடந்த அதிபர் தரப் போட்டிப் பரீட்சைக்கு ஆகக் கூடியது 50 வயதாக யறுக்கப்பட்டிருந்தது.

கணிசமான கடமை நிறைவேற்று அதிபர்கள் 50 வயதைத் தாண்டியதால, பரீட்சைக்குத் தோற்ற முடியல்ல. அப்படியிருந்தும் அது பற்றி வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு இம்மியும் கவனம் செலுத்தல்ல.

**மூப்பர்:-** நீங்கள் இதைச் சொல்லுறியள், புங்குடுதீவில் உள்ள ஒரு பாடசாலையில இருந்த கடமை நிறைவேற்று அதிபர் ஓய்வுபெறுவதற்கு 8 நாட்கள் மட்டுமே இருந்தது. ஆனால் அந்த எட்டு நாளைக் கூட விடாமல், அவரிட்ட இருந்து பொறுப்புக்கள் பறிக்கப்பட்டு, புதிய அதிபரிட்ட ஒப்படைக்கப்பட்டிருக்குது எண்டால், பிறகென்ன நிலைமையைச் சொல்ல வேணுமோ.

**சிறாப்பர்:-** 15 வருடமாகக் கடமை நிறைவேற்று அதிபர்களாகப் பணியாற்றியவர்களை ஆசிரியராகக் கடமையாற்றும்படி வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு கூறும்போது, எங்கட வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஒண்டும் கதைக்கவில்லையோ.


இந்தக் கேள்வியோடு ஆலடி மௌனமாகியது. அந்த மௌனத்தைக் கலைக்க எவரும் இல்லாத போது, ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணி மட்டும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறிபோகும் வெடுக்குநாறி

**"வெடுக்குநாறி மலையில் ஆதியில் இருந்தது பௌத்த விகாரையே. அதை அழித்து விட்டு சிவலிங்கத்தை தமிழர்கள் பிரதிஸ்டை செய்தார்கள். சுமார் 500 வருடங்கள் பழமையான பௌத்த சின்னங்கள் அங்கு அழிக்கப்பட்டன - சரத்வீரசேகர —**



மதச் சுதந்திரம் என்பது ஒரு இனத்தின் அடிப்படை உரிமை. அந்த உரிமையை எவரும் தட்டிப்பறித்து விட முடியாது. இதுவே உலக வழமை. உலக வழமையாக இருந்தாலும் இலங்கையில் மதச் சுதந்திரம் இருக்கிறதா என்ற கேள்வி இன்றுவரை இருக்கவே செய்கிறது.

போருக்குப் பின்னரான காலப்பகுதியில் இன ரீதியிலும் மதரீதியிலும் தமிழினம் மிகப் பெரும் கொடுமைகளை அனுபவித்துக்கொண்டிருக்கின்றது.

இதற்கு தீர்வைத் தர வேண்டிய ஆட்சியாளர்கள் அப்பிரச்சினைகளை மழுங்கடிப்பதில் தீவிரம் காட்டிவருகின்றனரே தவிர தமிழினத்திற்கான நீதியை பெற்றுத்தர இம்மியும் முயற்சிக்கவில்லை.

மாறாக ஆட்சி அதிகாரங்களில் இருப்பவர்களே விதண்டாவாதப் பேச்சுக்களைப் பேசுவதிலும் தமிழினத்தின் தொன்மைகளை இழிவு படுத்துவதிலும் கடுமை காட்டி வருகின்றனர்.

இவற்றை எதிர்த்து கேள்வி கேட்டாலோ, எதிர்பார்ப்பாட்டம் மேற்கொண்டாலோ அவர்களை கைது செய்வதை பாதுகாப்புத்தரப்பினர் வழமையாக்கி விட்டனர்.

இதனூடாக தமிழினத்தை அச்சுறுத்தி அவர்களின் பேச்சு, ஒன்றுகூடும் சுதந்திரத்தை இல்லா தொழிப்பதே இதன் நோக்கமாகும்.

தமிழர் பூர்வீகங்களில் பௌத்தத்தை திணிப்பதை நிறுத்தினாலே நூறுவீதம் இனங்களுக்கிடையிலான பிரச்சினை தீர்ந்து விடும். அந்தளவிற்கு தமிழர் பூர்வீகங்களை பௌத்தத்திற்குரியது என்று கூறிக்கொண்டு அங்கு பௌத்தத்தை திணிக்க முற்படுவதை தமிழினம் ஒரு நாளும் ஏற்றுக்கொள்ளாது.

இவற்றை மேற்கொள்வது அரச இயந்திரங்கள் என்பதைத்தான் தமிழினத்தினரால் ஜீரணிக்க முடிய வில்லை.

நாட்டின் ஆட்சியாளர்கள் என்பவர்கள் இந்த நாட்டில் வாழும் அனைவருக்கும் சமமான உரிமையை வழங்கக் கூடியவர்களாகவே இருக்கவேண்டும்.

ஆனால் இங்கு நிலை அவ்வாறு இல்லை. எங்கு தமிழரின் தொன்மையான வழிபாட்டுத் தலங்கள் இருக்கின்றதோ அங்கே பௌத்தத்திற்கு சொந்தமான இடம் என்று அடையாளப்படுத்தி அதைக் கையகப்படுத்துவதில் முழுமூச்சாய் செயற்படுகிறார்கள். இச் செயற்பாட்டை எதிர்த்தால் பாதுகாப்புத்தரப்பினரே தமிழினத்துக்கு எதிராக செயற்படத் தொடங்கி விடுவார்கள்.

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விடயமும் இப்படிப்பட்டதே.

இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த தமிழர் பண்பாடு, கலாசாரத்துடன் பின்னிப்பிணைந்து காணப்படும் வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தை பௌத்த மதத்திற்குரிய இடம் என அடையாளப்படுத்துவதில் இருக்கும் யதார்த்தம் நகைப்புக் குரியதே.

இந்த நாடு பௌத்த நாடு என்று கூறுகிறார்கள். ஆட்சி அதிகாரங்கள் பெரும்பான்மை பௌத்தர்களிடம் இருப்பதால் அதை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம். ஆனால் பல்லாயிரம் ஆண்டு பழமையான தமிழர் பூர்வீகங்களை பௌத்த மரபுரிமைக்குரிய இடங்கள் என அடையாளப்படுத்தினால் நிலை மோசமானதாகவே அமையும்.

நிலை இதுவாக இருக்கையில் வெடுக்குநாறி மலையில் கோவில்கள் எதுவும் கிடையாது. பௌத்த மரபுரிமையுள்ள இடங்களுக்கு சென்றால் கைதாவீர்கள். என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பராளுமன்றில் தெரிவித்திருக்கின்றார்.

வெடுக்குநாறி விவகாரத்தில் பாதுகாப்புத்தரப்பினரின் அடாவடியை எதிர்த்து தமிழ் பாரளுமன்ற உறுப்பினர்கள் பாரளுமன்றில் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட வேளையிலேயே பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

இந்த நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் பாதுகாப்புத் தரவேண்டிய அமைச்சர் ஒருவர் ஒரு இனத்தின் பூர்வீகத்தை மறைத்து தன் இனத்தின், மதத்தின் மீது கருணை காட்ட முற்பட்டால் அந்த அமைச்சு அவரிடமிருந்து பயன் ஏதும் இல்லை என்றே பொருள்.

தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினரும் இனவாத கருத்தை ஆயுதமாகக் கொண்டவருமான சரத் வீரசேகரவும் தனது கருத்தை முன்வைத்திருக்கிறார். அதாவது, வெடுக்குநாறி மலையில் ஆதியில் இருந்தது பௌத்த விகாரையாம் அதை அழித்து விட்டுத்தானாம் சிவலிங்கத்தை தமிழர்கள் பிரதிஸ்டை செய்தார்கள். சுமார் 500 வருடங்கள் பழமையான பௌத்த சின்னங்கள் அங்கு அழிக்கப்பட்டதாக அவர் கூறியிருக்கிறார்.

தொல்பொருள் சின்னங்கள் என்பது அனைவருக்கும் பொதுவானவை. தொல்பொருள் அனைத்தும் பௌத்தத்திற்குள் அடங்கும் எனக் கூறுவதற்குள் இருக்கும் இன-மத வன்மத்தை பெரும்பான்மை ஆட்சியாளர்கள் உடன் கைவிட வேண்டும்.

நாட்டில் போர் வெடிக்கக் காரணமாக இருந்தது அடக்குமுறை என்ற ஒற்றைச் செயற்பாடே.

சிறுபான்மைத் தமிழரை அடக்குமுறையினூடாக அச்சுறுத்த முற்பட்டதன் விளைவு மூன்று தசாப்பதத்திற்கு மேல் போரையும் அழிவுகளையும் கண்டு மீண்டு வந்திருக்கிறோம்.

இதைப் புரிந்து கொள்ளாமல் மீண்டும் அதே இடத்தில் இருந்து தொடங்கப்படுமாக இருந்தால் அது ஏற்கனவே நடந்ததை விட மிகப் பெரும் அழிவுகளைத் தருவதாக அமைந்துவிடும்.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

**படம்:** தர்மதுரை
**இயற்றியவர்:** பஞ்சு அருணாசலம்
**இசை:** இளையராஜா
**பாடியவர்:** கே.ஜே.யேசுதாஸ்



அண்ணன் என்ன தம்பி என்ன சொந்தமென்ன
பந்தமென்ன சொல்லடி எனக்கு பதிலை

நன்றி கொன்ற உள்ளங்களை கண்டு கண்டு
வெந்தபின்பு என்னடி எனக்கு வேலை

நம்பி நம்பி வெம்பி வெம்பி ஒன்றுமில்லை என்ற பின்பு
உறவு கிடக்கு போடி இந்த உண்மையைக் கண்டவன் ஞானி

அண்ணன் என்ன தம்பி என்ன சொந்தமென்ன பந்தமென்ன...

ஆசையில் நான் வைத்த
பாசத்தில் நேசத்தில் வந்ததிங்கு
வேதனையும் சோதனையும்தான்
நெஞ்சம் வெந்ததடி சோகத்தினில் தான்

பாம்புக்கு பால் வைத்து
நான் செய்த பாவத்தில் வந்ததிங்கு
கொஞ்சமல்ல நஞ்சமல்லடி
எந்தன் நெஞ்சமிங்கு நெஞ்சமில்லடி

காருக்கும் பேருக்கும் தேருக்கும் ஆசையென்ன
நேருக்கு நேர் நின்று ஏய்த்திடும் மோசம் என்ன

ஊருக்கு நியாயங்கள் சொல்லிடும் வேஷம் என்ன
உண்மையை கொன்றபின் நெஞ்சுக்கு நீதி என்ன

போகும் பாதை தவறானால் போடும் கணக்கும் தவறாகும்

அண்ணன் என்ன தம்பி என்ன சொந்தமென்ன பந்தமென்ன...

நன்றி கொன்ற உள்ளங்களை கண்டு கண்டு
வெந்தபின்பு என்னடி எனக்கு வேலை

நம்பி நம்பி வெம்பி வெம்பி ஒன்றுமில்லை என்ற
பின்பு உறவு கிடக்கு போடி

இந்த உண்மையைக் கண்டவன் ஞானி
நம்பி நம்பி வெம்பி வெம்பி ஒன்றுமில்லை என்ற பின்பு
உறவு கிடக்கு போடி இந்த உண்மையைக் கண்டவன் ஞானி

அண்ணன் என்ன தம்பி என்ன
சொந்தமென்ன பந்தமென்ன....

தந்தையின் சொல் நின்று மந்திரம் தானென்று கண்டதடி
பிள்ளை என்ற உண்மை உள்ளமே
எந்தன் உள்ளம் எங்கும் அன்பு வெள்ளமே

சொந்தத்தில் பந்தத்தில் மோசத்தில் சோகத்தில் வந்து நின்று
உண்மைதனை இன்று உணர்ந்தேன்
இதை கண்டு கண்டு இன்று தெளிந்தேன்

பட்டது பட்டது என் மனம் பட்டதடி
சுட்டது சுட்டது சூடிகள் சுட்டதடி
விட்டது விட்டது கைகளும் விட்டதடி
கொட்டுது கொட்டுது ஞானமும் கொட்டுதடி
வானம் பார்த்து பறக்காதே
பூமியில் பிறந்தாய் மறக்காதே

அண்ணன் என்ன தம்பி என்ன சொந்தமென்ன பந்தமென்ன....

# ஓய்வை நோக்கி டோனி

ஐ.பி.எல் இன்னும் தொடங்கவில்லை. ஆனாலும் சேப்பாக்கம் மைதானத்தில் மாலை வேளைகளில் ஆயிரக்கணக்கான ரசிகர்கள் கூடுகிறார்கள். காரணம் டோனி. ஐ.பி.எல் தொடரை முன்னிட்டு சேப்பாக்கம் மைதானத்தில் அவர் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். தினசரி மாலையில் மைதானத்துக்கு டோனி வருகிற நேரம் தொடங்கி, பயிற்சியை முடித்து இரவு அவர் ஹோட்டலுக்குத் திரும்பும் வரை மொத்தக் கூட்டமும் அப்படியே நிற்கிறது.

எங்கெங்கு காணினும் டோனி... டோனி என்கிற ஆராவாரம் மட்டுமே கேட்டுக் கொண்டிருக்கிறது. இது, டோனி ஆடவிருக்கும் கடைசி ஐ.பி.எல் சீசனாக இருக்கக் கூடும் என்கிற யூகத்தினால் கூடுதலாக அன்பைப் பொழிந்துவருகின்றனர். சென்னை என்றால் டோனி. டோனி என்றால் சென்னை. இதுதான் இப்போது வரைக்குமான நிலைமை. ஷேன் வார்ன், டிராவிட், சச்சின் என ஜாம்பவான்கள் மற்ற அணிகளுக்கு கப்டனாக இருந்த சமயத்திலும், டோனி தான் சென்னை அணியை வழிநடத்தினார். அவர்களுக்கு அடுத்த தலைமுறையாக ரோஹித், விராட் கோலி போன்றோர் கப்டனாக வந்த போது அவர்களோடும் நேருக்கு நேர் நின்று போட்டி போட்டார். இப்போது ரிஷப் பண்ட், சுப்மன் கில் போன்ற 2கே கிட்ஸ் கப்டனாகிவிட்டனர். இந்த சீசனில் அவர்களுடனும் டாஸ் போடப் போகிறார்.

இடையில் 2 ஆண்டுகள் தவிர்க்க முடியாத காரணங்களால் புனே அணிக்காக ஆடியதைத் தவிர்த்து, அத்தனை சீசன்களிலும் சென்னை அணிக்காகவே ஆடியிருக்கிறார். அணியை 5 முறை சம்பியனும் ஆக்கியிருக்கிறார். டோனிக்கும் சென்னை என்பது ஓர் எமோஷன். இந்த மக்கள் கொடுத்த அன்பில் அவரும் திக்குமுக்காடிப்போய் நிற்கிறார். அதனால் ஓய்வை நோக்கி நகர்வதென்பது அவருக்குமே கடினமானதாகத் தான் இருக்கிறது.

2019 ஓ.டி.ஐ உலகக்கோப்பைக்குப் பிறகு, டோனி இந்திய அணிக்காக ஆடவில்லை. 2020இல் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார். அப்போதிருந்தே ஐ.பி.எல் இலிலும் டோனியைச் சுற்றி ஓய்வைப் பற்றிய பேச்சுகள் சுழலத் தொடங்கின. போதாக்குறைக்கு கொரோனாவுக்கு மத்தியில் நடந்த அந்த 2020 சீசனில் சென்னை அணி மிக மோசமாகத் தோற்றது. ஐ.பி.எல் வரலாற்றில் முதல் முறையாக சென்னை அணி ப்ளே ஆப்ஸ்க்குத் தகுதி பெறாமல் லீக் சுற்றோடு வெளியேறியது. டோனியின் மீது கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

அந்த சீசனிலேயே அவர் ஓய்வை நோக்கி நகரக்கூடும் அல்லது சென்னை அணியே அடுத்த கப்டனைப் பற்றி யோசிக்கத் தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இரண்டுமே நடக்கவில்லை. அணி நிர்வாகம் டோனியின் மீது வைத்திருந்த நம்பிக்கையில் சிறு சேதாரம் கூட ஏற்படவில்லை. இதுதான் உங்களின் கடைசி சீசனா? எனும் கேள்விக்கு `Definitely Not' என தனது ஸ்டைலில் பன்ச் வைத்து, அடுத்த சீசனுக்குத் தயாரானார் டோனி.

2021 சீசனில் அப்படியே தலைகீழ். சென்னை அணி மிகச்சிறப்பாக ஆடி, கோப்பையை வென்று கம்பேக் கொடுத்தது. கம்பேக் கொடுப்பது ஒன்றும் எங்களுக்குப் புதிதானதல்ல. நான் இன்னும் ஓய்ந்துவிடவில்லை என டோனி பேசினார். இந்த சீசன் முடிந்த பிறகு, சென்னையில் நடந்த பாராட்டு விழாவில், என்னுடைய கடைசிப் போட்டியைச் சேப்பாக்கம் மைதானத்தில் ஆடவே விரும்புகிறேன் என டோனி நெகிழ்ச்சியாகக் கூறியிருந்தார். ஆனாலும் கடந்த 2023 சீசனின் தொடக்கத்திலிருந்தே ஒவ்வொரு போட்டியிலும் தன்னுடைய ஓய்வு குறித்து சூசகமாகப் பேசிக் கொண்டே இருந்தார். டோனியின் கடைசி சீசனாக அது இருக்கும் என நினைத்த ரசிகர்கள் மைதானங்களுக்குப் படையெடுத்தனர். அத்தனை மைதானங்களும் மஞ்சள் மயமானது.

எல்லா மைதானங்களிலும், டோனி... டோனி.. என்கிற ஆர்ப்பரிப்பு விண்ணைப் பிளந்தது. திரில்லாக நடந்த இறுதிப்போட்டியில் சென்னை அணி வென்றது. கோப்பையை வாங்கிவிட்டு தோனி ஓய்வு முடிவை அறிவிப்பார் என நினைக்கையில் டுவிஸ்ட் கொடுத்தார். இதுதான் நான் ஓய்வை அறிவிக்க சரியான தருணம். ஆனால், மக்கள் என் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்திருக்கின்றனர் நன்றி எனக் கூறிவிட்டு விடைபெறுவது எளிதான விடயமாக இருக்கும். ஆனால், நான் கடினமாக உழைத்து இவர்களுக்காக இன்னும் ஒரு சீசனில் ஆட முயல்வேன் எனப் பேசினார். ரசிகர்களின் ஆர்ப்பரிப்பு இரட்டிப்பானது.

டோனி முன்பு சொன்னதைப்போல சென்னையில் வைத்து கடைசிப் போட்டியை ஆடுவதற்கான சூழல் இப்போதுதான் உருவாகியிருக்கிறது. கடந்த சீசனின் சாம்பியன் என்பதால் இந்த சீசனின் இறுதிப்போட்டி சென்னையிலேயே நடக்கும். ஒருவேளை சென்னை அணி இறுதிப்போட்டிக்குத் தகுதிபெறும் பட்சத்தில், டோனிக்கு அவர் நினைத்த வகையிலேயே திருப்தியான விடைபெறல் வாய்க்கக்கூடும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை



**04 செங்கை ஆழியான்**

குவிக்கப்பட்ட கற்கள் கோட்டை கட்டுவதற்குப் போதுமானவையாக இருக்கவில்லை. எனவே எஞ்சிய கோயில்களையும் அவசியமாயின் சைவரின் பெரும் வீடுகளையும் அவன் இடித்துத் தள்ளிவிடுவான். என்ற பயத்தில் கோட்டை கட்டுவதற்குத் தேவையான முருகைக் கற்களை யாழ்ப்பாணத்திற்கு அருகில் இருக்கும் தீவுகளிலிருந்து தோணிகள் மூலம் சேகரித்துத் தருவதாக யாழ்ப்பாணத்து முதலிமார்களும் வன்னிமைகளும் வலிந்து ஒத்துக்கொண்டனர்.

அதற்குரிய செலவினைத் தருவதாக ஒலிவேறா ஒப்புக் கொண்டான். அயற் தீவுகளிலிருந்து முருகைக் கற்கள் தோணிகள் மூலம் கொண்டுவரப்பட்டன. ஒவ்வொரு தோணி முருகைக் கற்களுக்கும் 3 பணம் வழங்கப்பட்டது. அதனால் தோணிகளையுடைய பலரும் இதில் ஈடுபட்டனர். வேலணை (தண்ணீர்த்தீவு) புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு முதலான தீவுகளைச் சேர்ந்தவர்கள் முருகைக் கற்களைச் சேகரித்துக் குவித்துத் தோணிகளுக்கு வழங்கினர். அதற்கு அரைப்பணம் பெற்றுக் கொண்டனர். அக்கற்களை ஏற்றிச் செல்லும் தோணிகளுடன் காவலாகப் போகும் அதிகாரத்துக்கு மாதம் ஒன்றுக்குப் பதின்மூன்று பணம் சம்பளமாக வழங்கப்பட்டது.

கோட்டை கட்டுவதற்குரிய சுதை தயாரிப்பதற்கான சுண்ணாம்புக் கால்வாய்கள் யாழ்ப்பாணத்தின் பலபகுதிகளில் அமைக்கப்பட்டன. அவை சுண்ணாம்புக்கற்களைச் சுட்டுப்பதமாக்கிப் பண்ணைக் கரையில் சேர்த்தன. அவற்றோடு கலப்பதற்காகக் கோவாவிலிருந்து சர்க்கரை மூடைகள் பெருமளவிலும் எடுத்துவரப்பட்டன. களிமண்ணும் அவற்றோடு சேர்ப்பதற்காகக் குளங்களிலிருந்து அகழ்ந்தெடுத்துக் குவிக்கப்பட்டது. சுட்ட சுண்ணாம்பும் சக்கரையும் களிமண்ணும் சேரும்போது முருகைக்கற்களைப் பலமாகப் பற்றும் சுதை உண்டாகிறது. இப்போது அனைத்தும் தயார்.

யாழ்ப்பாணத்திலிருந்து சைவாலயங்கள் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட முருகைக்கற்களும் சுண்ணாம்புக் கற்களும் நீள்சதுரக் கனங்களாகக் கல் தச்சர்களினால் பொழியப்பட்டிருந்தன. அவ்வாறு பொழியப்பட்ட கற்கள் கோட்டையை இலகுவாக அமைப்பதற்குப் போர்த்துக்கேயருக்குதவின. கோட்டை கட்டுவதில் போர்த்துக்கேய மேசன்மாருடன் உள்ளூர் மேசன்மார்களும் பங்குகொண்டனர். தலைமை மேசன் ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு ஒரு பணமும் அவனுக்குக் கீழ் வேலை செய்யும் மேசன்மார்களுக்கு நாளொன்றிற்கு அரைப்பணமும் கூலியாக வழங்கப்பட்டது.

(தொடரும்...)




காலத்தின் பதிவு 101

# கடல் புறா

"விளங்கும் படைத்தலைவரே. ஆனால் பழைய நிலை மீண்டும் ஏற்பட முதலில் மஞ்சளழகியை நீங்கள் திருமணம் செய்துகொள்ள வேண்டும்."

"ஆம்"

"அப்படித் திருமணமாகும் முன்பே நீங்கள் கொல்லப்பட்டால்?"

"அகூதா பழி வாங்குவார்."

"மாட்டார்." "ஏன்?"

"நீங்கள் மஞ்சளழகியைக் கெடுத்துவிட்டதாகப் பலவர்மன் பறைசாற்றுவான். அகூதாவிடமுள்ள பயத்தால் கொள்ளையர் அவன் சொல்வதற்குத் தலையாட்டுவார்கள். மஞ்சளழகியை நீங்கள் மணமுடிக்க ஒப்புக் கொண்டது வெளியில் வராமலே போனாலும் போகும்?"

இதனால் பலவர்மனுக்கு என்ன லாபம்?"

முதலில் அகூதாவிடமிருந்து பாதுகாப்பு, பெண்ணைக் கெடுத்தவனுக்காக அகூதா பழிவாங்க முற்படமாட்டார். இரண்டாவதாக, பூர்வக்குடிகளிடமிருந்து பாதுகாப்பு, அவர்கள் தலைவனொருவனைக் கொன்றதற்குப் பலவர்மன் பழி வாங்கிவிட்டதால் அவர்களையும் திருப்தி செய்தவனாகிறான். மூன்றாவதாக ஸ்ரீவிஜய மன்னரிடமிருந்து பாராட்டு கிடைக்கும். நிலத்திலும் கடலிலும் அரசாங்கத்தின் பெரும் துணையாயிருக்கும். பூர்வக் குடிகளைத் தன்னிடமிருந்து மாறுபடச்செய்த தமிழனைத் தொலைத்து நாட்டின் கடற்காவலரைத் திருப்தி செய்ததற்காக மன்னரின் நம்பிக்கை பலவர்மனிடம் அதிகப்படும் என்று அமீர் தன் கருத்தைத் தெளிவாக விளக்கிச் சொன்னான்.

அமீர் கூறியதில் மிகுந்த பொருளிருந்ததைப் புரிந்து கொண்ட இளைய பல்லவன் தன் ஆசனத்தில் நன்றாகச் சாய்ந்துகொண்டு தீவிர யோசனையில் இறங்கினான். பல வர்மனுக்கு மஞ்சளழகியிடம் பூரணமான அன்பிருந்ததை இளையபல்லவன் சந்தேகமறப் புரிந்து கொண்டிருந்தான். அந்த அன்பின் காரணமாக அவள் மனத்துக்கு துயரத்தைத் தரும் நடவடிக்கையில் பலவர்மன் இறங்கமாட்டான் என்ற அஸ்திவாரத்திலேயே தன் திட்டத்தை வகுத்திருந்தான் படைத்த லைவன். அந்த அன்பு ஒருவேளை உண்மையாகி விட்டால்? அந்த அன்பை விடச்சுயநலம் பெரிதாயிருந்தால் அமீர் சொன்ன வழியைக் கையாளலாம் பலவர்மன்.

திருமணமாகும் முன்பே என்னைக் கொலை செய்துவிட்டுத் திருமணம் செய்துகொள்வதாக நான் கூறியது வெறும் ஏமாற்று

## நிதிப் பெட்டியா? சதிப்பெட்டியா?


வித்தை என்று பறைசாற்றலாம். அதற்குக் கொள்ளையரும் ஒப்புக் கொள்வார்கள். நான் அழிந்துவிட்டால் அகூதாவிடமுள்ள பய[illegible]தால் பலவர்மன் சொல்லும் எ[illegible]யும் கொள்ளையர் ஒப்புக்கொள்வார்களா? என்று எண்ணிப் பார்த்த படைத்தலைவன் அமீர் சொல்வதிலும் அர்த்தமிருக்கிறது என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். இருப்பினும் தாங்களிருந்த நிலையில் வேறெந்தத் திட்டமும் பலனளிக்காது என்பதையும் புரிந்துகொண்டதால் கடைசியில் ஒரு முடிவுக்கு வந்து மீண்டும் தன் உபதலைவர்களை நோக்கி, அமீர் சொல்வதில் உண்மை இருக்கிறது.

ஆனால் நான் சொன்ன திட்டத்தைத் தவிர வேறு திட்டம் எனக்குத் தோன்றவில்லை. அக்ஷயமுனை நமது வசமாக வேண்டுமானால் துணிவுடன் அதைக் கையில் எடுத்துக் கொள்வதுதான் விவேகம். என் திட்டத்தின் முதல் படி[illegible] இந்தப் பகலிலேயே துவங்கிவிடுகிறேன். இன்றே நான் அக்ஷயமுனையைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்கிறேன். ஏற்றதும் [illegible]குள்ள கொள்ளையருக்குக் [illegible]ண்டியத் தேவரையும் கோட்டைக்குள் இருக்கும் படைக்கு [illegible]மீரையும் பொக்கிஷத்துக்குச் சேந்தனையம் பொறுப்பாளிகளாக நியமித்துவிடுகிறேன். இப்படிக் கடற்கரையும் கோட்டையும் பொக்கிஷமும் நம் வசமுமானால் பலவர்மனும் நமது வசமானது [illegible]லதான். அப்பொழுது மு[illegible]ிட்டப்படி நமது மாலுமிகள[illegible] கொள்ளையர் உதவி கொண[illegible] நமது மரக்கல[illegible]தைச் செப்பனிடட்டும்.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## கருமுகில் கூட்டங்கள்

கற்பனை கலந்த காரிருளினுள்
சுடர் கற்றையைத் தேடிச் செல்லும் ஈசல்கள்
நிகழ் எது நியம் எது என அறியாது
நயனமிடும் தத்துவ நடிகர்கள்!

நொடிகள் நட்டுவமிட நிமிடங்கள் கதிகள் உற
மணிகள் மந்திரமிட நாட்கள் நீட்சியுற
மாதங்கள் புரண்டோட வருடங்கள் தலையசைக்க
தசாப்தங்கள் யுகங்களாக தொடரும் இம்மனிதப் புரட்சி

திருந்திட வழியுண்டு தரணியில் இடமுண்டு
வாழ்ந்திடும் சொற்பொழுதில் விடத் திவலைகள் தேவையா?
கண்களை மூடி சிறுகணம் சிந்தித்தால்
புரட்சியும் வேண்டாம், புகார்களும் வேண்டாம் நேயம் ஒன்றே
போதுமே!

மௌனம் தேடும் மௌனராகத்தின் விளிம்பின்
கவிபுனையும் புதுமுகத் தாரிகை நான்
இனியும் கருமுகில் கூட்டங்கள் உறைந்திட
வெண்முகில் கூட்டத்தின் கதுமென்ற மழையினை ஏங்குகிறேன்!

**காருண்யா மோகனராசன், யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, தரம்-11**

## அடிமை நிலை மாறுமா?

அடிமை நிலை வேண்டுமா அனுதினமே!
அட்டூழியங்கள் நடைபெறும் நாடு தானடா!
வேந்தர் தொட்டு மக்கள் ஆட்சி வரையுமே!
அடிமைப்படும் இனம் இருக்க தான் செய்கிறதே!

தட்டிகேட்க யாருமில்லாத தமிழினம்
தடைகள் தாண்டி வந்த வரலாற்று சுவடுகளாம்
வோட்டு கேட்டு வரும் வேட்டு வீரர்கள்
எங்குதான் உங்கள் குரல் போனதோ!

உங்கள் இலக்கு ஏமாற்றும் நிலையல்லவா!
சமநீதி கிடைக்குமா சிதறி நிற்கும் இனமல்லவா!
தலைவன் இருந்த காலம் தோற்றுத்தான் போனதோ!
தரணியில் எவன் பிறப்பான் விடியலைத்தேடி

அடிமை விலங்கு உடைய எண்ணிப்பார்க்க முடியலே
எந்த நாடும் எமக்கு குரல் கொடுக்குமா!
அண்டைநாடு அடியோடு மறந்ததே!
என்று தனியும் எம் அடிமை நிலையா- தலைவிதியா!

**எஸ்.பி.தனா, தெல்லிப்பழை.**

## மௌனத்தின் தேடல்-708



### யாருக்கு என்ன பயன்?

விநாடியின் நூறின் ஒரு பங்கு
வித்தியாசத்தில் தோற்ற ஓட்டவீரன்
காலத்தின் அருமையை அறிவான்
காலத்தை வீணே போக்கி
புகைக்கும் போதைக்கும் அடிமையாகி
செல்போன் பேஸ்புக்கில் மூழ்கி
வாழ்வைத் தொலைத்துவிட்டு
பூமிக்குப் பாரமாய் இருப்பதில்
யாருக்கு என்ன பயன்?

**பி.மதுஷ்சனி, தையிட்டி.**

### கடமையைத் தொடங்கு

கயிறு கட்டி இழுத்தால்
கடிகாரம் நின்று விடலாம்
காலம் நின்று விடுமா?
கடந்து விட்ட காலம்
தொடுத்து விட்ட பாணம்
சொல்லி விட்ட வார்த்தை
மீளவும் திரும்பி வருமா?
வீண்முயற்சி வேண்டாம்
காலம் பின்னோக்கிச் செல்லாது
கயிற்றை விட்டுவிட்டு
உன் கடமையைத் தொடங்கு!

**பிரமா.யதுர்சன்.கொ.இ.க.**

### "தடுக்க ஏலாத ஒன்று"

கல்தோன்றி மண்தோன்றிய
காலம் தொட்டு இந்த நேரம்
ஓடிக்கொண்டே இருக்கிறது
இது ஆண்டவனால் கூட
கட்டி நிறுத்த ஏலாத ஒன்று
எம்மையெல்லாம் துரத்திய
வண்ணம் ஓடிக்கொண்டிருக்கும்
மணிக்கணக்கு
எத்தனை முயற்சி செய்தாலும்
தடுக்க முடியாது- ஓட்டும்
விடுங்கள்

**அபிஇலம்ராலிகா, சித்தன்கேணி.**

### பத்துப்பத்து

கல்தடக்கி விழுந்தவர் காலத்தைக் கடத்திய பின்
எக்ஸ்ரே எடுத்த போது எலும்பு முறிவு தெரிந்தது
பத்துப் பத்தாய் நாட்கள் பத்திரம் காட்டிக் காட்டி
போனதால் பத்துப் போட்டாலும் கூட
பயன் தராது என்று கூறி வலி நோவைக் குறைக்கும்
மென்று ஊசிமட்டும் போட்ட செயல்
பொன்போன்ற பொழுதுகளை வீணாக்கிப் போக்க
வேண்டாமென்று என்றும் இது வலியுறுத்தி எச்சரிக்கும்.

**க.நாகராசா ,நுணாவில்.**

### நிறுத்த முடியுமா?

சுற்றி ஓடிக் கொண்டிருக்கும்
சுழல் கடிகாரத்தை
நிறுத்த நினைக்கும்
உன்நிலையை-என்னவென்று
சொல்வேன்...
கயிறு கட்டி இழுத்துவிட்டால்
நின்று விடும் கடிகாரமுள்
ஆனால் காலத்தின் ஓட்டத்தை
நிறுத்த முடியுமா?....

**ஆ.லக்ஷ்மி**
**வவுனியா.**

### ஓடு... ஓடு...

ஓடும் காலம் ஓடும்
ஓயாது நீயும் ஓடு
போகும் காலம் போகும்
காணாதே வாழ்வின் தாகம்
சேரும் பணம் சேரும் என
சோம்பேறியாகிடாதே
உழைத்து வாழ்வதே
நீ நிலைத்து வாழும் நிலை
என்பதை உணர்ந்து ஓடு

**சித்தார் விஜய்**

### விழுத்துக்கள்!

மன்மத எழுத்துளுக்கு மகுடம் சூட்டுகிறது
வணிகப் பொருளாதாரம்
திருக்குறளும்,திரிகடுகமும்
நாலடியார்,நான்மணிக்கடிகை
மாணவர்களின் மதிப் பெண்களுக்காய்
மனப்பாடத்தில் மட்டுமல்ல மனித நேயத்தின் மரபார்ந்த
அறவொழுக்கம் மண்ணின் உரிமைகளாகக்
கலையழகுடன் மிளிர எழுதுவோம்.

**தமிழினியன்**

## மௌனத்தின் தேடல்- 709



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம், இல.191, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். / எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிம்மதி இல்லாது துன்பப்படும் தமிழினத்தில் பேதம் பார்க்கும் முட்டாள்கள் பற்றி?

**சுதன் குப்பிளான்**

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் போராட்டம் புரட்சியாக வெடிக்குமா?

வெடுக்கு நாறி ஆதி லிங்கேஸ்வரர், கோவிலே இல்லை என்கிறார் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர்.

அது எப்படி தமிழர்களின் பூர்வீகங்களைக் குறிவைத்து அதை ஆக்கிரமித்து அங்கு அவர்கள் பிரசன்னத்தை அச்சுறுத்தி அதன் பிறகு அந்த இடம் பௌத்தத்திற்கு உரியது என்று கூற மனம் வருகிறதோ.

அடுத்தவர்களின் துரும்பைக்கூட தொட நினைக்க வில்லை தமிழினம். ஆனால் தமிழினத்தின் பூர்வீகங்களை சொந்தம் கொண்டாட துடிக்கிறது பேரினவாதம்.

தமிழர் பூர்வீகங்களை பௌத்த சின்னங்களாக்கி பௌத்தத்தை புராதனம் என்று காட்ட முற்படுவது ஒரு நாளும் ஏற்புடையது அல்ல.

அதை தமிழினம் விரும்பவுமில்லை. இதை ஆட்சியாளர்கள் புரிந்து கொண்டால் சரி.

**சி.லயன்சன் வளலாய்**
**விஜயரட்ணம் யாழ்ப்பாணம்**

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தின் சிங்கள ஆதிக்கம் பற்றி?

அடுத்தவன் இடத்தை தன் இடம் என்று கதியாலை அரக்கி நட்டு காணி பிடிக்கும் கயவர்கள் போல அடுத்தவர் பண்பாடு, கலாசாரத்தை கையகப்படுத்தும் செயல் முதுகெலும்புள்ளோரின் செயல் அல்ல.

எந்த இடத்தில் இந்து தொன்மைகள் இருந்தாலும் அங்கு பௌத்தம் இருந்தது என்று வெறும் வாயை மெல்லும் அமைச்சர்கள், அரசியல்வாதிகள், இனவாதிகள் இருக்கும் வரை இந்த அவமானம் தொடரவே செய்யும்.

**பிரபா அத்தியடி**

தென்னிலங்கையில் ஒரே இரவில் ஆறுபேர் சுட்டுக்கொலை. இது பற்றி?

இதுவே வட பகுதியில் இவ்வாறு ஒரு விடயம் நடந்திருந்தால் இராணுவக் குவிப்பு, தீவிர சோதனை, அடையாள அட்டைக் கெடுபிடி, வீதித்தடை, கண்ட இடங்களெல்லாம் காவலரன் அமைப்பு என நிகழ்வு தடல் புடலாக இருந்திருக்கும்.

இவை அனைத்தையும்விட விடுதலைப் புலிகள் மீள் உருவாக்கம் என்ற புதுக் கதையை கிழப்பிவிட்டு அதற்கு ஓராயிரம் கைது, இப்படி அமர்க்களப்படுத்தி இருப்பார்கள்.

சர்வதேசமே வட பகுதியை உற்றுப் பார்த்திருக்கும்.கடவுள் காக்க வட பகுதியில் அவ்வாறு நடைபெறவில்லை.




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில்
தோன்றிய
கேள்விகளை
**076 097 3126**
என்ற இலக்கத்திற்கு
SMS செய்யுங்கள்

**கணேஸ் பருத்தித்துறை**

முருகன், இராஜேஸ்பயஸ், ஜெயக்குமார் உயிருடன் தாயகம் திரும்புவார்களா வியாசரே?

ராஜிவ்காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு சுமார் 35 வருடங்களாக சிறை என்ற கொடிய தண்டனையை அனுபவித்தவர்களுக்கு இன்னும் மன்னிப்பு என்ற எண்ணத்தை காட்ட மறுக்கும் இந்திய தேசத்தை நினைக்க மகாத்மா காந்தியடிகளின் நினைவுகளே மேலோங்கி நிற்கிறது.

அன்று காந்தி கோட்சேயை உயிருடன் விடாதீர்கள் என்று கூறியிருப்பாராக இருந்தால் அடுத்த கணமே கோட்சேயின் உயிர் பலி எடுக்கப்பட்டிருக்கும்.

இருந்தும் தேசத்தின் தந்தையின் மன்னிக்கும் பண்பு இந்தியாவையே உலகறியச் செய்தது.

மரண தண்டனையிலும் மிகக்கொடும் தண்டனையை உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் அனுபவித்தவர்களை மீண்டும் மீண்டும் துன்புறுத்த நினைப்பது ஏற்புடையது அல்ல.



விமானப்படை கண்காட்சிக்கு வந்த சனம் வெடுக்குநாறி ஆர்ப்பாட்டத்திற்கு வரவில்லையே?

**டனுஷாந் ராஷா திருநெல்வேலி**

தமிழரசுக்கட்சியின் தலைவராக சிறீதரன் செயற்பட முடியாது என்கின்றனரே சிலர்?

பதவி ஆசை சிலரைப் பாடாய் படுத்துகிறது. அந்தப் பதவிக்காக எந்த எல்லைவரை சென்றுவரும் நிலையிலேயே அவர்கள் இருக்கிறார்கள்.

தலைமைப் பதவி பறிபோன பின்னர் என்ன செய்யலாம் என அறை போட்டு யோசித்தவர்கள் வழக்கு போட்டு அதற்கு தடை போட்டார்கள்.

எதற்கும் நான் தயார் என சிறீதரன் கூறிவிட, இப்போது என்னசெய்யலாம் என தலையைசொறிந்துகொண்டிருக்கிறார்கள்.

**விஜயதரன் உரும்பிராய்**

விமானப்படை கண்காட்சிக்கு வந்த சனம் வெடுக்குநாறி ஆர்ப்பாட்டத்திற்கு வரவில்லையே?

எம் தலையில் குண்டுபோட்டவர்கள். உம் மீது குண்டு போட்ட விமானங்கள் இவை தான். இப்படித்தான் நாம் குண்டு போட்டோம் என்று வியக்க - வகுப்பு வைக்க சோளப் பொரியை வாங்கித் தின்றபடி கேட்டவர்களுக்கு வெடுக்கு நாறியைப் பற்றிய சிந்தனை எங்கே வரப்போகிறது சொல்லுங்கள்.

எல்லாம் விதி என்று நொந்து கொள்வதே தமிழர் விதியாகிவிட்டது.

**திகான் வடமராட்சி**

நிம்மதி இல்லாது துன்பப்படும் தமிழினத்தில் பேதம் பார்க்கும் முட்டாள்கள் பற்றி?

வெள்ளை நிறத்தொரு பூனை எங்கள் வீட்டில் வளர்வது கண்டீர். பிள்ளைகள் பெற்றந்தப் பூனை. அவை பேருக்கொரு நிறம் ஆகும்.

சாம்பல் நிறத்தொரு குட்டி. கடும் சாந்தின் நிறம் ஒரு குட்டி. பாம்பின் நிறமொரு குட்டி. வெள்ளை பாலின் நிறம் ஒரு குட்டி. எந்த நிறம் இருந்தாலும் அவை யாவும் ஒரே தரம் அன்றோ. இந்த நிறம் சிறிதென்றும் இஃது ஏற்றம் என்றும் சொல்லலாமோ. வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால் அதில் மானுடர் வேற்றுமை இல்லை. எண்ணங்கள் செய்கைகள் யாவும் இங்கு யாவர்க்கும் ஒன்றெனக் காணீர்.

-சுப்பிரமணிய பாரதியார்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

392

## தொப்பையை இலகுவாக குறைக்கும் வழிமுறைகள்...

எமது தொப்பையை எவ்வாறு குறைத்துக் கொள்ளலாம் என்பது பற்றிய முக்கியமான விடயங்களைப் பார்ப்போமாக இருந்தால் பொதுவாக தொப்பை வைத்தால் பார்ப்பதற்கு நன்றாக இருக்காது. அத்துடன் தொப்பை வைத்தால் அவர்களுக்கு பல தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகக் காணப்படுகின்றது.

சிலருக்கு சாதாரண உடல் நிறையுடன் தொப்பை இருக்கிறது. சிலருக்கு அதிகரித்த நிறையுடனும் தொப்பை இருக்கிறது. எனவே ஆய்வுகளின் முடிவுகள் என்ன சொல்கின்றன என்று பார்த்தால், அதிகரித்த நிறையுடன் தொப்பை இருப்பதை விட சாதாரண நிறையுடன் தொப்பை இருப்பது ஆபத்தானது. எல்லோருக்கும் தொப்பையை குறைத்துக் கொள்ள ஆசைதான். ஆனால், சில பிழையான மற்றும் விஞ்ஞானபூர்வமற்ற தகவல்களால் நாங்கள் பிழையாக வழிநடத்தப்பட்டு இந்த முயற்சியில் தோற்றுப் போகிறோம் அல்லது ஏமாந்து போகிறோம். தொப்பையை குறைப்பதற்கு அல்லது இல்லாமல் செய்வதற்கு எட்டு விடயங்கள் சம்பந்தமான ஒரு தெளிவு இருக்குமானால் நாம் இந்த முயற்சியில் வெற்றி பெறுவது கடினமாக இருக்காது. முதலாவது விடயத்தைப் பார்த்தால் தொப்பைக்கான சில பிரத்தியேக பயிற்சிகள் செய்வது, தொப்பைக்கு பெல்ட் கட்டுவது மற்றும் சில உபகரணங்களைப் பாவிப்பது போன்றவை மூலம் தொப்பையைக் குறைத்துக்கொள்ள முடியாது. இவற்றின் மூலம் தற்காலிகமாக தொப்பை குறைவது போன்ற ஒரு தோற்றப்பாடு இருந்தாலும், இவை தொப்பையை குறைப்பதற்கான வழிமுறைகள் இல்லை. இவற்றின் மூலம் எமது வயிற்றுக் குழியில் இருக்கும் கொழுப்பை (Visceral fat) குறைக்கவும் முடியாது. தொப்பை வைப்பதால் ஏற்படும் ஆபத்து வீதத்தையும் குறைக்க முடியாது.

இரண்டாவதாக, தொப்பையை குறைத்துக்கொள்ள சிலவற்றை உண்பது, குடிப்பது, உதாரணமாக Green tea குடிப்பது, கொள்ளு சாப்பிடுவது, சில மா வகைகளை கரைத்துக் குடிப்பது போன்றவற்றின் மூலமாகவும் தொப்பையைக் குறைத்துக்கொள்ள முடியாது. தொப்பை அல்லது தொப்பை ஏற்படுவதற்கான காரணம் நாம் சில பிழையான உணவுகளை அதிகமாக உண்பதாகும். இதனால் எமது வயிற்று தோலினுள்ளும் வயிற்றுக் குழியினுள்ளும் மேலதிகமான கொழுப்பு படிந்துதான் தொப்பை வைக்கின்றது. இவ்வாறு வயிற்றுக் குழியினுள் படிந்த கொழுப்பை, வேறு உணவு உண்பதால் கரைக்க முடியாது. அது கரையும் பொருளும் அல்ல. கரைந்த கொழுப்பை எவ்வாறு வெளியேற்றுவது என்பதும் ஒரு கேள்வி ஆகும். சில பிழையான தகவல்கள் மூலமும் பிழையான வழிநடத்தல்கள் மூலமும் நாம் அநாவசியமாக பெருந்தொகையான பணத்தையும் செலவழித்து விட்டு ஏமாந்து போகிறோம். இது ஒரு மனவருத்தமான விடயம்.

மூன்றாவதாக நாம் தெளிவு பெற வேண்டிய விடயம் என்னவென்றால், பொதுவான ஒரு பிழையான அபிப்பிராயம் இருக்கிறது. அதாவது, கொழுப்பு உணவுகளை உண்பதால் தான் எமக்கு தொப்பை வைக்கிறது என்று... அது தவறானது. தொப்பை வைப்பதற்கு பிரதானமான காரணமாக இருப்பது மேலதிகமாக மாப் பொருட்களை உண்பது தான். நாம் மேலதிகமாக மாப்பொருட்களை உண்டால் இது கொழுப்பாக மாற்றப்பட்டு வயிற்றுக் குழியினுள்ளேயும் வயிற்றின் உள் உறுப்புகளான குடல், ஈரல் மற்றும் தசைகளின் உள்ளே இந்த கொழுப்பு படிகிறது. இதுதான் தொப்பை வைப்பதற்கு பிரதானமான காரணமாக இருக்கிறது.

இந்த Visceral fat பல சுரப்புகளைச் சுரக்கின்றது. இந்த சுரப்புகள் எமக்கு பல தொற்றாநோய்களை ஏற்படுத்துகின்றன. உயர் குருதி அமுக்கம், சலரோகம், கொலஸ்திரோல் போன்ற பல தொற்றா நோய்களை ஏற்படுத்துகின்றன. இதற்கு பிரதானமான காரணமாக அமைவது மாப்பொருளே தவிர கொழுப்பு அல்ல. இதற்கு ஒரு படி மேலாக சில நல்ல கொழுப்புகள் Visceral fat ஐ குறைத்து, தொப்பை குறைவதற்கு காரணமாக அமைகின்றன என்று சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

நான்காவதாக நாம் தெளிவு பெற வேண்டிய விடயமானது, உணவிலே, எமது உடல் Insulin ஐ அதிகப்படுத்தும் உணவு வகைகளை தவிர்த்து விட வேண்டும். உடம்பில் Insulin இன் அளவு அதிகமாக இருந்தால், அது குளுக்கோஸை வேகமாக கொழுப்பாக மாற்றுகிறது. இதன் மூலம் வயிற்றுக் குழியில் படியும் கொழுப்பு வேகமாக அதிகரிக்கிறது. எனவே, எந்த வகையான உணவுகள் எமது உடலில் உள்ள Insulin இன் அளவை அதிகரிக்கின்றன என்று பார்த்தால், சீனி, சக்கரை போன்ற இனிப்பு வகைகள் எமது உடலில் உள்ள Insulin இன் அளவை வேகமாக அதிகரிக்கின்றன. இதனால் குருதியில் உள்ள குளுக்கோஸ் வேகமாக கொழுப்பாக மாற்றப்பட்டு வயிற்றுக் குழியில் வேகமாகப் படிகிறது. இதனால் தொப்பை அதிகரிக்கிறது. இது தொப்பை வைப்பதற்கு ஒரு முக்கியமான காரணமாக அமைகிறது. எனவே, தொப்பையைக் குறைக்க விரும்புவோர், சீனி, சக்கரை போன்ற இனிப்பு வகைகள் சேர்க்கப்பட்ட உணவுகளை அல்லது பானங்களை முற்றாக தவிர்த்து விட வேண்டும்.

அத்துடன் சீனியில் 50% குளுக்கோஸும், 50% புரக்றோசு எனப்படும் வெல்லமும் இருக்கிறது. இந்த புரக்றோசு உடலினுள் செல்லும் போது அதை ஈரலினால் மட்டுமே கையாள முடியும். கூடுதலான புரக்றோசு உடலை அடையும் போது, வேறு வழியின்றி அது கொழுப்பாக மாற்றப்பட்டு, வயிற்றுக் குழியில் படிந்து, தொப்பை வைப்பதற்கு பிரதானமான காரணமாக இருக்கிறது.

ஐந்தாவதாக நாம் தொப்பையைக் குறைத்துக்கொள்ள தெரிந்து வைத்திருக்க வேண்டிய விடயம், கடுமையான உடற்பயிற்சி செய்ய வேண்டும். உதாரணமாக, வேகமாக ஓடுதல், வேகமாக சைக்கிள் ஓடுதல், நீந்துதல் போன்ற கடுமையான உடற்பயிற்சிகளை செய்வது, Visceral fat ஐ குறைப்பதற்கு உதவியாக இருக்கிறது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கடுமையாக உடற்பயிற்சி செய்யும் போது நாம் களைத்து விட்டால் உடற்பயிற்சி செய்யும் வீதத்தை குறைத்து, பின் களைப்பு நீங்கியவுடன் மீண்டும் கடுமையான உடற்பயிற்சியை செய்ய முடியும். உதாரணமாக, நாம் வேகமாக ஓடும் போது களைத்து விட்டால், ஓடுவதை குறைத்து, நடந்து, சிறிது நேரத்தின் பின் மீண்டும் வேகமாக ஓட வேண்டும். இதனை தொடர்ந்து செய்ய வேண்டும். இது Intermittent high intensity exercise எனப்படுகிறது. இது Abdominal obesity எனப்படும் தொப்பையை குறைப்பதற்கு உதவியாக இருக்கிறது என்பதை உறுதி செய்து நிற்கிறது. இதனை விடுத்து வயிற்றிற்கு மட்டும் உடற்பயிற்சி செய்வதன்மூலம் இந்த Visceral fat ஐ குறைத்து விட முடியாது.

எனவே மீண்டும் வலியுறுத்துவது என்னவென்றால், எமது உணவில் மாப்பொருள் அடங்கிய சோறு, பிட்டு, இடியப்பம், பாண் போன்ற உணவுகளை தவிர்த்து தொப்பையைக் குறைத்துக்கொள்ள முடியும். அண்மையில் செய்யப்பட்ட ஒரு ஆய்வில் சம அளவான கலோரி பெறுமானம் உடைய மாப்பொருளையும் கொழுப்பையும் கொடுத்து, எந்த உணவிற்கு தொப்பை அதிகமாக வைக்கிறது என்று ஆராய்ந்தார்கள். இந்த ஆய்வின் முடிவிலே மாப்பொருட்களை உண்பதன் மூலம் தான் தொப்பை வைப்பது அதிகமாக இருக்கிறது என உறுதி செய்துள்ளனர். எனவே, எமது உணவில் இயன்றளவு மாப்பொருளை குறைப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

அடுத்ததாக, உணவில் புரதத்தை சேர்த்துக் கொள்வதன் மூலம் தொப்பையைக் குறைத்துக் கொள்ளலாம். இது பல காரணங்களினால் நடைபெறுகிறது. புரத உணவுகளை உண்பது நல்ல முறையில் எமது பசியை கட்டுப்படுத்துகிறது. இதனால் நாம் உள்ளெடுக்கும் உணவை கட்டுப்படுத்திக்கொள்ளலாம். அடுத்த விடயம், நாம் உள்ளெடுக்கும் புரதத்தை எரிப்பதற்கு எமது உடலின் சக்தியின் ஒரு பகுதி பயன்படுத்தப்படுகிறது. இதுவும் எமது நிறை குறைப்பிற்கு உதவியாக இருக்கும். நாம் மாப் பொருளோ, கொழுப்போ உள்ளெடுக்கும் போது அதனை உடல் பயன்படுத்துவதற்கு, மேலதிகமாக உடலின் சக்தி எதுவும் இழக்கப்படுவதில்லை. இதற்கு மேலதிகமாக, நாம் உண்ணும் புரதமானது Visceral fat ஆக மாற்றப்படாது. எனவே, இது எமது தொப்பையை அதிகரிக்காது.

நாம்நமது உணவிலே 80 - 160 கிராம் அளவு புரதத்தை உட்கொள்ள முடியும். புரத உணவுகளாக பால், தயிர், மோர், பருப்பு வகைகள், மீன், முட்டை, இறைச்சி, பயறு போன்றவற்றைக் குறிப்பிடலாம். இந்த புரத உணவு வகைகளுடன் நார்த்தன்மையான உணவு வகைகளான கீரை, இலை வகைகள், கரட் போன்ற மரக்கறி வகைகள், பழங்கள் ஆகியவற்றை சேர்த்து உண்டால் தொப்பை குறையும் வீதம் அதிகமாகும்.

எட்டாவதாக நாம் வாரத்திலே 2 அல்லது 3 நாட்கள் 18 மணித்தியாலங்கள் உணவு உண்ணாமல் விரதம் இருப்பது நல்லது. இந்த சந்தர்ப்பங்களில் Visceral fat மிக விரைவாக உடைக்கப்படுவது ஆய்வுகளின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. Visceral fat உடைக்கப்பட்டால் தொப்பை குறையும். இதில் முக்கியமான விடயம், அந்த விரதத்தை முடிக்கும் போது மாப்பொருள் உண்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு எடுத்தால் அது Visceral fat ஐ அதிகப்படுத்தும். விரதத்தை முடிக்கும் போது நார்த்தன்மையான மற்றும் புரத உணவுகளை அதிகமாக எடுப்பது நல்லது. எனவே, இவற்றை மனதில் நிறுத்தி, நாம் எமது தொப்பையை குறைத்துக்கொள்ள விரும்பி முயற்சி எடுத்தால், முயற்சி நிச்சயம் வெற்றி அளிக்கும்.

**Dr. சி. சிவன்சுதன்,**
பொது வைத்திய நிபுணர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடைக்காடு கலை இலக்கிய மன்றத்தின் அனுசரணையில் இடைக்காடு குறும்பட சிற்பிகள் கூடம் இணைந்து . இளங் கலைஞர் பா.இரமணாகரனின் எழுத்துருவில் 'துள்ளாதே தூங்காதே' காட்சியும் கானமும் இருவெட்டு வெளியீடு இடைக்காடு முனியப்பர் ஆலயத்தில் சிவராத்திரியை முன்னிட்டு வெளியீடு செய்யப்பட்டது.

# அடிக்கல் நாட்டல்

(யாழ்ப்பாணம்)

புலோலி கிழக்கு சந்தா தோட்டம் ஸ்ரீ முதலி (மனோன்மணி) அம்பாள் ஆலயத்தில் மூலஸ்தானம் மற்றும் அர்த்த மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நாளை 25 ஆம் திகதி பங்குனித் திங்களன்று காலை 9.30 மணியிலிருந்து 10.30 வரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இதில் உபயகாரர்கள், அடியார்கள், பூங்காவன இளைஞர்கள் சமூக ஆர்வலர்கள், யாவரும் ஆசார சீலராக வருகை தந்து குறித்த நிகழ்வில் தங்களையும் ஈடுபடுத்தி அம்பிகையின் அருட்கடாட்சங்களை பெற்றுக் கொள்ளுமாறு பரிபாலன சபை செயலாளர் இ. கிருபாகர சூரியன் அறிவித்துள்ளார். (நி)



யாழ்ப்பாணம் - நல்லூர் சட்டநாதர் கோவில் வருடாந்திர மகோற்சவ தேர்த்திருவிழா நேற்று சிறப்பாக நடைபெற்றது. (படம்-சிவசாந்தன்)

## மணல் ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு பகிரங்கமாக 48 கியூப் மணலின் ஏல விற்பனை நடைபெறும்.

கியூப் மணலின் அடிப்படை விலை 4500 என கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (நி)

# ரவைகள், ஹெரோயினுடன் இளைஞன் கைது

(வவுனியா)

வவுனியாவில் ரி56 ரக துப்பாக்கி ரவைகள் மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, செட்டிக்குளம் பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது இவர் கைதானார்.

செட்டிகுளம் காந்தி நகர் பகுதியில் ரி56 துப்பாக்கி ரவைகள் 13,1005 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது . (நி-250)

# அதிகரித்த வெப்பத்தால் நீர் நிலைகளை நாடும் மக்கள்

## சிறுவர்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்து

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியான சூழல் காரணமாக கிணறுகளில் நீர் வற்றி உள்ளதால் தூர இடங்களில் உள்ள நீர் நிலைகளைத் தேடி பொது மக்கள் செல்கின்ற நிலைமை உருவாகி உள்ளன.

வழமையாக யூன், ஜூலை மாதங்களிலேயே வறட்சியான சூழல் ஏற்படுவது வழமை. தற்போது கடும் வெப்பத்துடன் வறட்சி ஏற்பட்டிருப்பதன் காரணமாக நீர் நெருக்கடிகள் காணப்படுகின்ற கிராமங்களில் இருந்தே மக்கள் குளங்களை நோக்கி குளிப்பதற்காகச் செல்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

இதேவேளை வறட்சியான சூழலில் நீர் நிலைகளை நாடும் மக்கள் தமது சிறுவர்கள் தொடர்பாக விழிப்புணர்வுடன் செயற்படுமாறும் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் அறிவித்துள்ளனர். சிறுவர்கள் நீர் நிலைகளின் ஆழமான பகுதிகளுக்கு சென்று நீந்தி விளையாட வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி-350)

# தனியார் வகுப்புகளுக்கு அதிக பணம் செலவிடும் பெற்றோர்

## கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

பாடப்புத்தகங்களை 3 பிரிவுகளாகப் பிரித்து கற்பிப்பதன் மூலம் புத்தகப் பையின் எடை குறைக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தனியார் வகுப்புகளுக்கு பெற்றோர்கள் அதிக பணம் செலவழித்து வருகின்றனர்.

கல்விச் சீர்திருத்தங்கள் முன்வைக்கப்படும் போது தனியார் வகு ப்புகளில் பங்கேற்பது குறையும் என்றும் கல்வி அமைச்சர் தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு :1986 - இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா:<br>உயரம் : 5'5"<br>தகைமை/தொழில்: A/L,France<br>எதிர்பார்ப்பு -குணமான பெண்<br>தொ.இ: B/14295 | பிறப்பு-1990 -இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா-43<br>உயரம்: 5<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/14223 |
| பிறப்பு:1989 -இந்து<br>நட்சத திரம்: மூலம்<br>கி.பா: 40 1/2<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்- Doctor<br>எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்<br>தொ.இ: B/14296 | பிறப்பு-1996- இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: - 11<br>உயரம் : 5'3<br>தகைமை/ தொழில்: HND Management, MA<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், வெளிநாடு<br>தொ.இ: G/14225 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L . விவசாயம்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14298 | பிறப்பு -1995 - இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: - 50<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்: Bsc(Agri), விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,அரச உத்தியோகம்<br>தொ.இ: G/14226 |
| பிறப்பு: 1996- இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:- Diploma in IT, Webdesigner<br>எதிர்பார்ப்பு: படித்த குணமுள்ள பெண்,வெளிநாடு<br>தொ.இ: B/14301 | பிறப்பு -1996 -இந்து<br>நட்சத்திரம் - ரோகினி<br>உயரம் : 5'7"<br>தகைமை/தொழில்: MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor,Engineer<br>தொ.இ: G/14230 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசைக்கச்சேரியினுள் புகுந்த ஆயுததாரிகள்

# கதிகலங்கிய மொஸ்கோ!

- 60 பேர் உயிரிழப்பு
- சுமார் 100 பேர் படுகாயம்

(மொஸ்கோ)

**ரஷ்யாவின் தலைநகரான மொஸ்கோவில் திடீரென நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றினால் 60 பேர் வரை உயிரிழந்துள்ளதுடன் 100 இற்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**



மொஸ்கோவில் "பிக்னிக்" என்ற ராக் இசைக்குழுவின் கச்சேரியில் கலந்துகொண்ட மக்கள் மீதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், இசை நிகழ்ச்சியினுள் ஆயுதம் ஏந்திய நிலையில் திடீரென புகுந்த மூன்று முதல் ஐந்து பேர் வரை கொண்ட குழுவினர் இந்த தாக்குதலை நடத்தியுள்ளனர்.

மேலும் அவர்கள், இசை நிகழ்ச்சி இடம்பெற்ற இடத்தினை தீயிட்டு கொழுத்தியுள்ளதுடன் வெடிமருந்துகளை வீசியும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அதேவேளை துப்பாக்கி ஏந்தியவர்கள் தானியங்கி துப்பாக்கிச் சூடு நடத்தி கையெறி குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

அத்துடன், சம்பவ இடத்தில் இருந்த மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு வருவதாகவும் அங்கு பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.(நி)

# இளவரசி கேட் மிடில்டன் புற்றுநோயால் பாதிப்பு

(லண்டன்)

பிரிட்டிஸ் இளவரசி வில்லியம் கேட் மிடில்டன் புற்றுநோயல் பாதிக்கப்பட்டுள்ளார்.

வீடியோ அறிக்கையொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார் புற்றுநோய் பாதிப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து அதற்கு சிகிச்சை பெற்றுவருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடுமையான பல மாதங்களிற்கு பின்னர் இது மிகவும் அதிர்ச்சியை அளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் நான் நன்றாகயிருக்கின்றேன் ஒவ்வொரு நாளும் வலிமை பெற்றுவருகின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.

நோய்ப் பாதிப்பு குறித்த விபரங்கள் முழுமையாக வெளிவராத போதிலும் இளவரசி முழுமையாக குணமடைவார் என கென்சிங்டன் அரண்மனை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.



நான் வயிற்றில் சத்திரசிகிச்சை செய்துகொண்டவேளை நான் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருக்கின்றேன் என்ற விபரம் தெரியவரவில்லை ஆனால் சத்திரசிகிச்சைக்கு பிந்திய மருத்துவ பரிசோதனைகளின் போது நான் பாதிக்கப்பட்டிருப்பது உறுதியானது.

இந்த வகையான நோயினால் பாதிக்கப்பட்ட அனைவரையும் நான் இந்த தருணத்தில் நினைத்துப் பார்க்கின்றேன் எனத் தெரிவித்துள்ள இளவரசி கேட் இந்த வகை நோயினை அதன் எந்த வடிவத்தில் எதிர் கொள்பவராக நீங்கள் இருந்தாலும் நம்பிக்கை இழக்காதீர்கள், நீங்கள் தனியாக இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# இன்று ஒரு தகவல் 74



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## எரிபொருள் தரும் தாவரங்கள்

எதையும் எரிக்கிறத்திற்கு நாம் தயாராகத் தான் இருக்கிறோம். ஆனால் எரி பொருள்தான் சரியாக கிடைக்கிறதில்லையே.

பெற்றோல், மண்ணெண்ணெய் இதற்கெல்லாம் என்ன பாடு படவேண்டி இருக்கு.

அங்கே இங்கே பூமியைத்தோண்டிப் பார்த்து கிடைத்த வரைக்கும் எடுத்துக்கொண்டு இருக்கின்றோம். அதற்கு ஆகுற செலவும் ஆதிமாகிட்டே போகுறது. இன்னும் 100 வருடத்திலே பூமியிலே இருக்கிற எண்ணெயே தீர்ந்து விடும் என்கின்ற பயம் வேறு இருக்குது. அதனாலே இதுக்குப் பதிலா வேற என்ன செய்யலாம் என்கிற ஆராய்ச்சி மும்முரமாக நடந்து கொண்டு இருக்கிறது.

அமெரிக்காவிலே கலிபோர்னியா பல்கலைக்கழகத்திலே மெல்வின் கால்வின் என்ற ஒரு பேராசிரியர்.

சுலபமாக கிடைக்கக்கூடிய ஏராளமான தாவரங்களிலேயிருந்து எரி எண்ணெய்களை எடுக்கலாம் என்று அவர் கண்டுபிடித்து இருக்கிறார். பிரேசிலில் அமேசன் பகுதியிலே ஒரு அதிசயமான மரம் இருக்குதாம். அந்த மரத்திற்கு பெயர் கோவைஃபெரா மல்டிஜுகா.

ரப்பர் மரத்திலே இருந்து ரப்பர் பாலை எடுக்கிறோமல்லவா. அதேமாதிரி இந்த மரத்திலே இருந்து எண்ணெயை எடுக்கலாம். அதனாலே இந்த வகை மரங்களை அதிகளவிலே வளர்க்கிறதற்கு முயற்சி செய்கிறார்களாம்.

நல்லா வளர்ந்த ஒரு பெரிய மரத்திலே ஒரு ஓட்டை போட வேண்டும். அதிலே இருந்து எண்ணெய் வந்து கொண்டு இருக்கும். ஒரு நாளிலே 25 லீற்றர் வரைக்கும் எண்ணெய் கிடைக்குமாம். அதன் பின்பு ஒரு தக்கையாலே அந்த ஓட்டையை மூட வேண்டும். ஆறு மாதத்திற்கு பின்பு எண்ணெய் கிடைக்குமாம்.

இந்த எண்ணெய்க்கு பெயர் கோபைபா எண்ணெய். அதை அப்படியே டீசல் எஞ்சின் மேலே ஊற்றி ஒட்டலாம். இதைக் காய்ச்சி வடித்தால் பல விதமாக உபயோகப்படுத்தலாம்.

பிலிப்பைன்சிலே பிட்டோஸ் போரம் ரெசினிஃபெரம் என்று ஒரு மரம் அதிலே இருந்து எண்ணெய் கிடைக்குதாம். அதன் பழத்திலே கூட இலேசாக ஒரு எண்ணெய் இருக்குதாம். அதை நீராவியில் விட்டு காய்ச்சி வடித்து எடுக்கலாம். அதிலே ஹைட்ரஜனை செலுத்தி பக்குவப்படுத்த வேண்டும். அதன் பின்பு அதை பெற்றோலுக்கு பதிலாக உபயோகப்படுத்தலாம்.

இதே மாதிரி வேறு சில தாவரங்களில் இருந்தும் பாசியிலே இருந்தும் எண்ணெய் எடுப்பதற்கு வாய்ப்புக்கள் இருக்குதாம். இதையெல்லாம் எடுத்து உபயோகப்படுத்திக் கொண்டு இனிமேல் நாம் காலத்தை தள்ள முடியும். இல்லையென்றால் காரைத் தான் தள்ளிக் கொண்டு இருக்க வேண்டும். எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்துங்கள் என்று இப்பவே சத்தம் போட ஆரம்பித்து விட்டோம்.

பிலிப்பைன்சிலே விளக்கு மரம் ஒன்றை கண்டுப்பிடித்து இருக்கிறார்கள். ஆமாம் மரங்களிலே அது ஒரு வகை Energy tree என்று அதற்கு பெயர் வைத்திருக்கிறார்கள். பிலிப்பைன்சிலே ஏற்கனவே அந்த மரத்திற்கு Rumbang tree என்று பெயர்.

50 வருடத்திற்கு முன்னரே இந்த மரத்தைப் பற்றி அவர்களுக்கு தெரியுமாம். இருந்தாலும் அதோட உபயோகத்தை இப்ப தான் கண்டுபிடிச்சிருக்கிறாங்கள். அப்படி என்ன உபயோகம் அந்த மரத்தோட விதையை கொளுத்தினால் 15 நிமிடம் நல்லா எரியுமாம். அந்த பக்கத்திலே பல கிராமங்களிலே ஊர் ஜனங்கள் இதை நிறைய பொறுக்கிக் கொண்டு போய் வீட்டிலே வைத்திருக்கிறார்களாம்! எதற்கு?

இரவு நேரத்திலே விளக்குக்குப் பதிலாக இந்த விதையைக் கொளுத்தி வைத்துக் கொள்வதற்கு! வெளிச்சத்திற்காக வேறு வழியைத் தேடி அலைய வேண்டியதில்லை. வெளிச்சம் என்பது வெளியே மட்டும் இருந்தால் போதுமா உள்ளேயும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் தான் வெளியே இருக்கிற வெளிச்சமும் பிரயோசனப்படும்.

ஒருத்தன் தெருவிலே என்னத்தையோ தேடிக் கொண்டு இருந்தான். வழியிலே போனவரும் அவனுக்காக பரிதாப்பட்டு தேடிப் பார்த்தார். ஒன்றுமே கிடைக்கவில்லை.

அதிக நேரம் தேடியும் பிரியோசனம் இல்லை. கடைசியாக அந்த வழிப்போக்கர் என்னத்தை தொலைத்தீர்கள் என்று கேட்டான். என்னுடைய மோதிரத்தைத் தான் என்றார் இவர். எந்த இடத்திலே தொலைத்தீர்கள் என்றார். அதற்கு இவர் அதோ இருக்கே என் வீடு அந்த வீட்டுக்குள்ளே தான் தொலைத்தேன் என்றார்.

என்னாங்க இது? வீட்டுக்குள்ளே தொலைத்து விட்டு இப்படி வீதியிலே வந்து தேடிக் கொண்டு இருக்கிறீங்கள் என்று கேட்டார். அதற்கு அவர் நான் என்னாங்க செய்யிறது? வீட்டுக்குள்ளே வெளிச்சம் இல்லை. இங்கே தான் வெளிச்சம் இருக்கு. வெளிச்சம் உள்ள இடத்திலே தேடினால் தானே கிடைக்கும் என்றார் இவர்.

வெளிச்சம் வீட்டுக்குள்ளே மட்டும் தானே இல்லை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்குவிக்க ஆள் இருந்தால்
ஊக்கு விற்பவனும் தேக்கு விற்பான்.

~ கவிஞர் வாலி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## முன்னெடுக்கப்படும் திட்டங்களை வெளிப்படுத்த வேண்டும்

வடக்கு மாகாணத்தின் நிர்வாகம் தொடர்பில் பலமுறை இவ்விடத்தில் பிரஸ்தாபித்து விட்டோம். எனினும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

தவிர, நம் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் இது தொடர்பில் கருசனையற்றவர்களாக இருக்கின்றனர்.

அவர்களைப் பொறுத்தவரை தங்களை முதன்மைப்படுத்துவதும் எந்த விடயத்தில் ஈடுபட்டால் தங்களைப் பொதுமக்கள் கூர்ந்து கவனிப்பர் என்பதிலுமே அவர்கள் கவனம் செலுத்துகின்றனர்.

இதன் காரணமாக வடக்கு மாகாணத்தில் எந்த அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அதனால் எத்தனை குடும்பங்கள் நன்மை பெற்றுள்ளன.

எத்தனை இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கப் பெற்றுள்ளது என்பது பற்றிய விடயம் எதுவும் இல்லை.

ஆம், வட மாகாணத்துக்கு வருகின்ற வெளிநாட்டுத் தூதுவர்கள் வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்து வட மாகாணத்தின் அபிவிருத்திக்குத் தாங்கள் உதவி செய்வோம் என உறுதிமொழி வழங்குகின்றனர். அந்த விபரங்கள் ஊடகங்களிலும் வெளிவருகின்றன.

ஆனால் இன்றுவரை குறித்த வெளிநாடுகள் வட மாகாணத்தின் அபிவிருத்திக்கு எந்தவகையில் உதவி நல்கியுள்ளன.

அந்த அபிவிருத்தித் திட்டத்தால் ஏற்பட்ட நன்மைகள் என்ன? என்பது பற்றி இதுவரை எதுவும் தெரியவில்லை.

அதேவேளை, இந்த விடயங்கள் தொடர்பில் ஊடகவியலாளர்களும் ஆளுநரிடம் கேள்வி எழுப்புவதாகத் தெரியவில்லை.

உண்மையில் வடக்குக்கு விஜயம் செய்கின்ற வெளிநாட்டுத் தூதுவர்கள் அத்தனை பேரும் வடக்கின் அபிவிருத்திக்கு உதவி செய்வோம் எனக் கூறுவார்களாயின், அவர்களிடம் நாம் எந்த அபிவிருத்தித் திட்டத்தை முன்வைத்தோம். அதற்கான முன்மொழிவுகள் எவை? என்பது பற்றி வடக்கு ஆளுநர் அலுவலகம் வெளிப்படுத்த வேண்டும்.

இதைச் செய்யாதவிடத்து, வெளிநாட்டுத் தூதுவர்கள் வட மாகாண மக்களின் அபிவிருத்திக்கு உதவுவோம் எனக் கூறிவிட்டு, எதுவும் செய்யவில்லையா? அல்லது வடக்கு ஆளுநர், அவர்களிடம் எந்தத் திட்டத்தையும் முன்வைக்கவில்லையா? என்ற கேள்விகள் எழவே செய்யும்.

இதுதவிர, இந்தியத் தூதுவர் வடக்கின் ஆளுநரைச் சந்தித்தபோது, அவரிடம் ஆளுநர் முன்வைத்த கோரிக்கை என்ன? எங்கள் மாணவர்கள் இந்தியாவில் உயர்கல்வி கற்பதற்கு ஏதேனும் வாய்ப்பளிக்குமாறு கேட்கப்பட்டதா? அவ்வாறு கேட்கப்பட்டால், அதற்கு இந்தியத் தூதுவர் வழங்கிய பதில் என்ன என்பதெல்லாம் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துவது ஆளுநரின் கடமை.

ஆனால் இதுவரை அவ்வாறான விடயங்கள் எதுவும் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டதாக இல்லை.

ஆக, இலங்கை அரசாங்கம் எங்ஙனம் தமிழ் மக்களை ஏமாற்றுகிறதோ அதுபோல வெளிநாட்டில் இருந்து வருகின்ற தூதுவர்களும் எங்களை ஏமாற்றுகிறார்களா? அல்லது அவர்கள் உதவி செய்யத் தயாராக இருந்தும் வடக்கு மக்களுக்கு அந்த உதவி கிடைக்கக்கூடாது என யாரேனும் தடுக்கின்றனரா? என்பது பற்றியெல்லாம் நாம் ஆராய வேண்டும்.

எனினும் எங்களுக்கு அவ்வாறு ஆராய்வதற்கு யார் உளர்.

ஆகையால் எங்களை எவரும் எப்படியும் ஏமாற்றலாம். அதுதான் இப்போது நடக்கிறது.

# காசநோயால் கடந்த வருடம் வவுனியாவில் மூவர் உயிரிழப்பு

## 58 பேர் பாதிப்பு

### வவுனியா காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி தெரிவிப்பு

(வவுனியா)

காசநோயினால் வவுனியாவில் கடந்தவருடம் மூன்று பேர் இறப்படைந்துள்ளதுடன் 58 பேர்நோயாளர்களாக இனம் காணப்பட்டுள்ளதாக வவுனியா காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி கே.சந்திரகுமார் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

இலங்கையில் இறப்பிற்கு காரணமான மூன்றாவது நோயாக இது காணப்படுகின்றது.

கடந்த வருடம் வவுனியா மாவட்டத்தில் 58 நோயாளர்கள் இனம் காணப்பட்டனர். அதில் மூன்றுபேர் உயிர் இழந்துள்ளனர்.

தொடர்ச்சியாக இரு வாரங்களிற்கு மேற்பட்ட இருமல் மாலைநேரத்தில் காய்ச்சல், உணவில் நாட்டம் இன்மை, உடல்நிறை குறைவடைதல், சளியுடன் ரத்தம் வெளியேறல். இப்படியான அறிகுறிகள் தென்பட்டால் அது காசநோயாக இருக்கலாம்.

மேற்கூறிய அறிகுறிகள் இருந்தால் அருகில் உள்ள பொதுவைத்திய சாலைகளுக்கு சென்று சாதாரண சளிப்பரிசோதனையினை இலவசமாக செய்துகொள்வதன் மூலம் இந்த நோயினை இனம் காணலாம்.

எந்தவித அறிகுறியும் இல்லாமலும் இந்த நோய் உடலில் இருக்கலாம். குறிப்பாக ஏற்கனவே நோய் ஏற்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் அல்லது நாட்பட்ட நோய் கொண்டவர்கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள், சிறுநீரக நோயாளர்கள், மூட்டுவாதம் போன்ற நோய்கள் உள்ளவர்களுக்கு அறிகுறிகள் வெளிப்படாமல் இந்த நோய்க்கிருமி தங்ககூடும். அப்படியானவர்களுக்கு பரிசோதனையினை செய்வதன் மூலம் அதனை கண்டறியலாம்.

ஒருவருக்கு காசநோய் ஏற்பட்டால் ஆறுமாதத்திற்கு நேரடி கண்காணிப்புடனான சிகிச்சையின் மூலம் மருந்துகளை பெற்றுக்கொண்டால் அதனை முற்றாக குணப்படுத்தலாம். அது தொடர்பில் அச்சம் கொள்ளத்தேவையில்லை. சிகிச்சைகளை எடுக்கத்தவறினால் அது தீவிரமடைந்து இறப்பிற்கு வழிவகுக்கும் என அவர் தெரிவித்தார். (நி)

# பரமபிதா காட்டிய பாதை

## செய்யவேண்டியதைச் சரியாகச் செய்வோம்

குருத்தோலைத் திருவிழா இன்று ஆகும். இயேசு எருசலேம் நகருக்குள் வெற்றி ஆர்ப்பரிப்போடு நுழைந்த நிகழ்ச்சியை நினைவுகூர்ந்து கத்தோலிக்கர்கள் ஆண்டுதோறும் கொண்டாடுகின்ற ஒரு விழா இதுவாகும்.

பைபிளின்படி மக்கள் அன்று குருத் தோலைகளைப் பிடித்துக்கொண்டு இயேசுவுக்கு எதிர்கொண்டு போனார்கள். இவ்வாறு குருத் தோலைகளை அசைத்து, வழியில் துணிகளை விரித்து, இலை, தழைகளைப் பரப்புவது ஓர் ஆழ்ந்த பொருள் படைத்த செயலாக மாறியது. இயேசுவை இன்று தம் மெசியாவாக ஏற்பவர்களும் அவரை மாட்சியுடைய மன்னராக மட்டுமே பார்க்காமல், துன்பங்கள் மற்றும் சாவு வழியாக உலகிற்குப் புத்துயிர் வழங்கியவராகக் காணவேண்டும் என்பது இவ் விழாவின் பொருள்.

கத்தோலிக்க திருச்சபை வழக்கப்படி, குருத்தோலை கோவிலுக்கு வெளியே மந்திரிக்கப்படும். அங்கு குருத்து ஞாயிறு ஏன் கொண்டாடப்படுகிறது என்பதைக் குரு விளக்குவார். இறை வேண்டலுக்குப்பின் பவனி ஆலயம் நோக்கித் தொடங்கும். பவனியின்போது பாடல்கள் பாடப்படும்.

குறிப்பாக, ஓசன்னா என்னும் குரல் ஒலிக்கப்படும். அச்சொல்லுக்கு எபிரேய மொழியில் "இறைவா, விடுவித்தருளும்" என்பது பொருள். அத்துடன் "வாழ்க!" என்பதும் அதன் பொருளாகும். கிழக்குத் திருச்சபையில் குருத்து ஞாயிறு "ஆண்டவர் எருசலேமில் நுழைந்த திருநாள்" என்னும் பெயரில் கொண்டாடப்படுகிறது. இது வழிபாட்டு ஆண்டின் முக்கிய பன்னிரு திருநாள்களுள் ஒன்றாகும். புனித வாரத்தின் முதல் நாளாக இது கருதப்படுகிறது.

வெற்றிபெற்றால் வாகைப்பூக்களைச் சூடிக்கொண்டு தாயகம் திரும்புவதை வழக்கமாக வைத்திருந்தார்கள் சங்ககாலத் தமிழர்கள். உரோமானியர்கள் கொஞ்சம் மாறுபட்டு, வீர விளையாட்டுகளில் வெற்றி பெற்றால் ஒலிவமரக் கிளைகளைக் கையில் ஏந்திக்கொண்டு, தங்கள் வெற்றியைப் பறைசாற்றும் விதமாக உற்றார், உறவினர் நண்பர்கள் கூட்டத்துடன் தெருக்களில் பவனியாக வருவதை வழக்கமாக வைத்திருந்தார்கள்.

இப்படி வெற்றிக்களிப்போடு வருபவர்களை, வழி நெடுகிலும் ஒலிவமரக் கிளைகளை அசைத்து வரவேற்று உற்சாகப்படுத்துவார்கள் உரோமானியக் குடிமக்கள். இந்தப்பழக்கம் இஸ்ரேல் மக்களாகிய யூதர்களின் வாழ்க்கை முறையிலும் தொற்றிக்கொண்டது. ஆனால் இவர்கள் ஒலிவமரக்கிளைகளோடு பேரீச்ச மரக்கிளைகள், லில்லி மலர்க்கொத்துக்கள் ஆகியவற்றையும் பவனியாக ஏந்திச்செல்ல ஆரம்பித்தார்கள்.

இயேசுவுக்குச் சொந்த ஊர் மக்கள் வழங்கிய வரவேற்பை நினைவுகூரும் விதமாக யூத கிறிஸ்தவர்களால் முதலில் கொண்டாடப்பட்டு வந்த இந்த குருத்தோலை நிகழ்வு நாளடைவில் எகிப்து, சிரியா என்று பரவி, பிறகு கிறிஸ்தவர்களின் முக்கிய நினைவேந்தலாகியது என்கிறது வரலாறு.

இயேசு ஜெருசலேமுக்குச் சென்றபோது மக்கள் கூட்டம் குருத்தோலைகளை ஏந்திச் சென்று அவரது பாதங்களில் வைத்து வரவேற்றதை நினைவுகூரும் விதமாக நோன்பு காலத்தின் கடைசி வாரம் குருத்தோலை ஞாயிறுடன் ஆரம்பமாகிறது. ஸ்பானியாவின் வடமேற்குப் பகுதியைச் சேர்ந்த கிறிஸ்தவ பெண் துறவியான Etheria இன் பிரயாண ஏட்டில் முதலாவது குருத்தோலை ஞாயிறு ஊர்வலம் பற்றிய குறிப்புக் ஒன்றும் காணப்படுகிறது என்கிறது வரலாறு. அவர் அந்த நாள் பஸ்கல் கிழமையின் ஆரம்பம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கி.பி நான்காம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் அவர் ஜெருசலேமுக்குச் சென்றார். மேற்குலக தேவாலயங்களில் ஸ்பானியாவிலேயே முதலில் இந்த குருத்தோலை ஊர்வலம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. அது ஏறக்குறைய கி.பி ஐந்தாம் நூற்றாண்டிலே நடைபெற்றிருக்கலாம் என்கிறார்கள். உரோமாபுரியில் கி.பி. 12 ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் இந்த ஊர்வலம் நடைபெறவில்லை எனவும் கூறுகிறார்கள் ஆய்வாளர்கள்.

அமெரிக்காவில் Philadelphia இல் உள்ள Messiah Lutheran தேவாலயம் இந்த பண்டைய நடைமுறையை மீள ஆரம்பித்தது. Episcopal தேவாலயங்களில் ஆராதனையின் முடிவில் அனைவருக்கும் குருத்தோலைகள் வழங்கப்பட்டன. இன்று இந்த வழக்கம் மேற்குலகில் பெருமளவில் மறைந்து விட்டது.

ஒரு கட்டத்தில் வீதியெங்கும் ஆடைகளை விரித்து அரசனை வரவேற்பதைப்போல் வரவேற்ற மக்கள், தாவீதின் குமாரன் எனக் கூறியவர்கள். ஒரு வாரம் கழித்து கொலை வெறி கொண்ட பரபாசை விடுதலை செய்யும்படியும் இயேசுவைக் கொலை செய்யும்படியும் கூக்குரலிடுகின்றனர். மக்கள் கொலை வெறியர்களாக மாறி குற்றமில்லா இரத்தைக் குடிக்க விரும்புகின்றார்கள். இதனால் சரி செய்ய வேண்டியதை சரி செய்தார் இயேசு. நாமும் செய்யவேண்டியதை சரியாகச் செய்வோம்.

ம.பிரான்சிஸ்க்,
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1970 இற்குப் பின் யாழ்ப்பாண நகர்



பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்,
முன்னாள் துணைவேந்தர்
யாழ். பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பகுதியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் 12 மாடிக் கட்டடம் நகரின் உயர்ந்த கட்டடமாகும். போதனா மருத்துவமனையிலும் பல மாடிக் கட்டடங்கள் அமைக்கப்பட்டும், அமைக்கப்பட்டு வருவதையும் காணலாம்.

கட்டப்படும் மாநகரசபைக் கட்டடம், கட்டி முடிக்கப்பட்ட பிறகு நகரின் முக்கிய நிலத்தடயமாக அது விளங்கும்.

### வீட்டுமனைகள்


அண்மைக்காலமாக யாழ்ப்பாண நகரில் மூன்று அடுக்கு வீடுகள் பரவலாகக் கட்டப்பட்டு வருவதைக் காணலாம். பழைய வீடுகள் இடிக்கப்பட்டு அதே இடத்தில் பெரிய மாளிகை வீடுகள் அமைக்கப்படுகின்றன. புலம்பெயர்ந்தவர்களாலும் குறிப்பாக மருத்துவத்துறை சார்ந்தவர்களாலும் வர்த்தகர்களாலும் இவ்வீடுகள் அமைக்கப்படுகின்றன. நகரின் மக்கள் தொகை அதிகரிக்கா விட்டாலும் நகரில் வீட்டுத்தேவை அதிகரித்துச் செல்வது ஒரு முக்கிய விடயமாக உள்ளது. நகரில் வீடற்றவர்களின் எண்ணிக்கையும், வீடு கட்ட நிலமற்றவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துப் போவதும், நிலம் சிறுசிறு பரப்புக்களாகப் பிரிக்கப்படுவதும் திறந்த கிணற்றிற்குப் பதிலாக காணியை மிச்சம் பிடிக்க குழாய்க் கிணறு அமைக்கப்படும் போக்கும் வளர்ந்து வருகின்றன. நகரில் பல்கலைக்கழக மாணவர்கள், ஏனைய மாணவர்கள் மற்றும் தொழில் செய்யும் பெண் பிள்ளைகள் தனியாக இருப்பதற்கேற்ற முறையில் வீடுகள் அமைக்கப்படுவதுடன் வாடகைக்கு விடும் நோக்கில் மனை இணைப்புகளுடன் வீடுகள் அமைக்கப்படும் போக்கும் அதிகரித்து வருகின்றது. மண்டபங்கள், பல பல்நோக்கு மண்ட பங்கள், திருமண மண்டபங்களான செல்வ மஹால், திவ்ய மஹால், செல்வா பலஸ், நடராஜா பரமேஸ்வரி மண்டபம், இலங்கைவேந்தன் மண்டபம், துர்க்கா மணி மண்டபம், லொயலா மண்டபம் போன்றன அண்மைக் காலத்தில் அமைக்கப்பட்டவையாகும். செல்வா நினைவரங்கம், இந்திய கலாசார மண்டபமும் பொது நிகழ்வுகளையும் கலாசார நிகழ்வுகளையும் நடத்துவதற்கு ஏற்ற முறையில் நவீன வசதிகளைக் கொண்டுள்ளன. இவை நகருக்குக் கிடைத்துள்ள பெரும் கொடைகளாகும்.

### நகர வாழ்வு

யாழ்ப்பாண நகர வாழ்வு மிகவும் அமைதியானது. நகரில் தொழில் செய்வோரில் அதிகமானோர் நகரிற்கு ஓரிரு கிலோமீற்றர் தூரத்திலேயே வாழ்கின்றனர். மிகத்தூரத்திலிருந்து நகரத்திற்குத் தினமும் வந்து போவோர் மிகவும் குறைவு. மத்திய தரக் குடும்பங்களில் பெண்கள் வேலைக்குப் போவதும், இரு சில்லு வாகனத்தில் தம் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் ஏற்றி இறக்குவதும், சூப்பர் மார்க்கட்டில் பொருள் வாங்குவதும் பொதுவான நகரக் காட்சியாக இருக்கின்றது. யாழ்ப்பாண நகரம், நகர-கிராமியவாழ்வுகள் கலந்த பண்பாட்டுக் கோலத்தைக் கொண்டது. மாலை 7 மணிக்குள் நகரம் அமைதி யாகிவிடும். மக்கள் வீடுகளில் முடங்கிவிடுவர். நகரில் இரவு வாழ்க்கை முழு வளர்ச்சி பெறவில்லை. அண்மைக் காலமாக சுற்றுலாத்துறையாலும் மற்றும் ஹோட்டல்களின் வளர்ச்சியாலும் இரவு வாழ்க்கை சிறிது சிறிதாக வளர்ச்சி பெற்றுவரும் போக்கைக் காணலாம்.

நகரில் யுத்தத்தின் பின்னர் தனியார் வாகன உடைமை பலமடங்கு அதிகரித்துள்ளது. ஆனால் வாகன அதிகரிப்பிற்கு ஈடாக வீதிவலைப்பின்னல் மேம்படுத்தப்படவில்லை. இதனால் விபத்துகளும் அதிகரித்து வருவதைக் காணலாம்.

நகர உள்ளகப் போக்குவரத்தில் பெருவழக்காகக் காணப்பட்ட துவிச்சக்கர வண்டிப் பாவனை இன்று மிகவும் குறைந்துவிட்டது. துவிச்சக்கரவண்டி திருத்தும் கடைகளும் மிகச்சிலவே உள்ளன. பெண்களின் வாகனப் பாவனை இன்று அதிகரித்துள்ளது. இச்சிறப்பைத் தென்னிலங்கை நகரங்களில் காண்பதரிது.



### அச்சு இலத்திரனியல் ஊடகங்கள்

யாழ்ப்பாண நகரம் நீண்ட அச்சு ஊடக வரலாற்றைக் கொண்டது. விடிவெள்ளி, பாதுகாவலன், இந்து சாதனம் போன்ற பத்திரிகைகள் நூற்றாண்டுக்கு மேலாக நகரில் வெளிவருகின்றன. 1950களில் ஈழநாடு பத்திரிகை பிராந்திய ஊடகமாக விளங்கியது. பின் போர்க்காலத்தில் ஈழநாடு பாதிப்புக்குள்ளாகி வெளிவராத நிலையில் வலம்புரி, ஈழ முரசு, உதயன், ஈழநாதம், Saturday Review, என்பன தோற்றம் பெற்றன. இன்று நகரம் பிராந்திய அச்சு ஊடக மையமாகத் திகழ்கின்றது. வலம்புரி, உதயன், தினக்குரல், ஈழ நாடு ஆகியன நகரில் இருந்து தினசரிப் பத்திரிகைகளாக வெளிவருகின்றன.

ASK நிறுவனத்தால் நடத்தப்படும் டான் (DAN) தொலைக்காட்சி சேவையில் பல்வேறு சனல்கள் இருப்பதுடன் இதனது சேவைகள் 24 மணி நேரம் இடம்பெறுகின்றதாகவும் சர்வதேச ரீதியாக ஒளி பரப்பப்படுகின்றதாகவும் உள்ளன. டான் தொலைக்காட்சி சேவைக்கு அப்பால் IBC, Capital, DD சேவைகளும் உள்ளன. தேசிய சர்வதேச தொலைக்காட்சி சேவைகளை எடுத்து வழங்கும் நிறு வனங்களும் இருக்கின்றன. மேலும் பல்வேறு சமூக ஊடகங்கள் வலை த்தளம் ஊடாக செயற்படுகின்றன. யாழ்ப்பாண நகரம் இன்று பிராந்திய ஊடகமையமாக விளங்குகின்றது.

### பொழுதுபோக்கு

நகரில் சுப்பிரமணியம் பூங்காவும், புதிதாக விருத்தி பெற்று வருகின்ற பண்ணை பொழுதுபோக்குப் பகுதியும், கோட்டையைச் சூழவுள்ள பகுதிகளும் இத்துறையில் முக்கியம் பெற்றுள்ளன. அண்மையில் ஆரியகுளப்பகுதி நவீன முறையில் விருத்தி செய்யப்பட்டாலும் மக்கள் பொழுதுபோக்குக்காகப் பயன்படுத்துவது குறைவு.

யாழ்ப்பாண நகரம் பல துறைகளில் ஓரளவு விருத்தி பெற்றாலும் பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் இருப்பது நகரின் செயற்பாட்டைப் பெரிதும்பாதித்து வருகின்றது.

### நகரின் பொருளாதாரமும் மக்களின் வாழ்க்கைத்தரமும்

யாழ்ப்பாண நகரின் பொருளாதாரமும் மக்களின் வாழ்க்கைத் தரமும் கடந்த 15 வருடங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளன. மீன்பிடி, வீட்டுத்தோட்டம், சிறிய, நடுத்தர சேவை சார் தொழில்கள், அரசசேவை, வர்த்தகம், வங்கிச் சேவைகள் மூலம் கிடைக்கும் வருமானத்துடன் சேமிப்புக்களிலிருந்து கிடைக்கும் வருமானமும் நகரின் பொருளாதார இயக்கத்தில் முக்கிய இடம் பெறுகின்றது. அண்மைக் காலத்தில் சுற்றுலாத் துறையாலும் நகரின் பொருளாதாரம் வலுப்பெற்று வருகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினதும் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையினதும் நிதி சார் செயற்பாடுகள் நகரின் பொருளா தாரத்தில் முக்கிய இடம் வகிக்கின்றன.

நகரில் மக்கள் தொகை அதிகரிக்காத போதும் மக்களின் நுகர்வுச் சக்தி அதிகரித்திருக்கின்றது என்பதை அறிய முடிகின்றது. வர்த்தகச் செயற்பாடுகள் மக்களின் பொருளுடைமைப் பண்புகள் (வாகனம், ஸ்மாட் தொலைபேசி, தொலைக்காட்சி, தகவல் தொழில்நுட்ப வசதிகள் மற்றும் வீட்டு மின்சாரப் பொருட்கள்) வீடுகளின் தர மேம்பாடு போன்றன மக்களின் வாழ்க்கை த்தர உயர்வைக் காட்டும் சுட்டிகளாகும்.

நகரை மேலும் மேம்படுத்த பின்வரும் நடவடிக்கைகளைத் துரித கதியில் மேற்கொள்வது நல்லது.

(1) சகல வீடுகளுக்கும் குழாய் வழியாக 24 மணிநேரமும் நீர் வழங்கப்படும் நிலை இருக்க வேண்டும்.

(2) நகருக்கு ஒருங்கிணைந்த சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்.

(3) மழை காலத்தில் நகரின் பல்வேறு பகுதிகளில் மழைநீர் தேங்கும் நிலைமையை இல்லாது செய்ய வேண்டும். மேலும் திறந்த கால்வாய்களில் தடையற்ற நீரோட்டம் இடம் பெற வேண்டும்.

(4) நகரின் பிரதான சந்தை, நவீன சந்தையாக அமைக்கப்பட வேண்டும்.

(5) யாழ்ப்பாணம்பேருந்துநிலையம் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

(6) யாழ்ப்பாண நகர மத்தியில் பாதுகாப்பான வாகன நிறுத்துமிடம் அமைக்கப்பட வேண்டும்.

(7) நகர வீதிகள் சீர்செய்யப்படுவதுடன், நகருக்குள் காணப்படும் குறுக்கு ஒழுங்கைகளைச் சீர் செய்து போக்குவரத்தை இலகுபடுத்த வேண்டும்.

(8) நகரின் மத்திய வியாபார வலயத்தில் வீதி அடர்த்தியை அதிகரித்து செறிவான நிலப்பயன்பாட்டுக்கு வழி வகுக்க வேண்டும். இன்று போக்குவரத்து வசதியின்மையாலும், முகப்பு இன்மையாலும் பெறுமதிமிக்க பாரியளவு நிலப்பரப்புக்கள் நகரின் மத்திய வலயத்தில் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன.

(9) பண்ணைப்பகுதியை மேலும் பொழுதுபோக்குப் பகுதியாக மேம்படுத்த வேண்டும்.

(10) கரையோரப் பிரதேசங்களின் வாழ்விட வசதிகள்மேம்படுத்தப்படுவதுடன் அக்குடியிருப்புக்கள் நகரச் செயற்பாட்டுடன் இணைக்கப்பட வேண்டும்.

(11) அரியாலை, பொம்மை வெளி, கல்லுண்டாய், வீட்டுத்திட்டங்கள் நல்ல முறையில் விருத்தி செய்யப்பட வேண்டும்.

(12) பெரிய, நடுத்தர வீதிகளில் பாதசாரிகள் நடைபாதை விருத்தி செய்யப்படவேண்டும்.

(13) வீதியோரங்களில் முள்மரங்கள் நடுவதும், வீதி நடைபாதை யோரத்தில் பூங்கன்றுகள் நடுவதும் தவிர்க்கப்பட வேண்டும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பால்மாவின்...

பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்

இதேவேளை, புறக்கோட்டை மொத்த சந்தையில் ஒரு கிலோக்கிராம் வெள்ளை சீனியின் மொத்த விலை 20 முதல் 25 ரூபாய் வரையில் அதிகரித்துள்ளமை தெரியவந்துள்ளது. (ம-7)

## தையிட்டி...

காங்கேசன்துறையில் சட்டவிரோதமாக பொதுமக்களின் காணிகளை அபகரித்து அமைக்கப்பட்டுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர் போராட்டமாக ஒவ்வொரு பௌர்ணமி தினத்திற்கும் முதல்நாள் ஆரம்பமாகி பௌர்ணமி தினத்தன்று மாலை நிறைவடையும்.

அதற்கமைய, நேற்று ஆரம்பமாகிய இந்தப் போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய செல்வராசா கஜேந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-7)

## நிமோனியாக்...

காலையில் காய்ச்சல் ஏற்பட்டதாகவும் சிறிது நேரத்தில் காய்ச்சல் அதிகமாகி சிறுவன் மயக்கம் அடைந்துள்ளான்.

இதனைத் தொடர்ந்து சிறுவன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நள்ளிரவு 12.00 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான்.

இம் மரணம் தொடர்பில் நேற்று சனிக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## 2 கடற்படையினர்...

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33)

## நீதிமன்ற...

வேண்டும். உண்மையை மறைப்பதும் ஒருவகையில் குற்றமாகும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கேள்வி, பதில் வருமாறு,

**கேள்வி:** முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலின் உண்மை சூத்திரதாரியை அறிந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உங்களின் நிலைப்பாடு என்ன ?

**பதில்:** அவரது கருத்து பாரதூரமானது. குண்டுத் தாக்குதல் தொடர்பில் அவருக்கு ஏதும் தெரிந்திருந்தால் அதனை அவர் பகிரங்கப்படுத்த வேண்டும். நீதிமன்றம் அழைப்பு விடுக்கும்வரை காத்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. உண்மை தெரிந்திருந்தும் அதனை மறைப்பதும் குற்றமாகக் கருதப்படும்.

**கேள்வி:** ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார்?

**பதில்:** அவசரப்பட வேண்டியதில்லை. உரிய நேரத்தில் எமது தீர்மானத்தை அறிவிப்போம் என்றார். (ம-7)

## ராஜபக்ஷ...


என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போதைய அரசுக்கு ராஜபக்ஷக்கள் பூரண ஆதரவை வழங்குகின்றார்கள். இதனை நான் வரவேற்கின்றேன். இந்த அரசுக்குள் எந்தவித முரண்பாடுகளும் இல்லை. அரசியல் இலாபம் கருதி சில ஊடகங்கள் வெளியிடும் பொய்யான செய்திகளை எமது மக்கள் நம்பமாட்டார்கள் என்று நான் நினைக்கின்றேன்" என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஒருவருக்கு வழங்கிய விசேட

## கொல்கத்தா திரில் வெற்றி



கொல்கத்தா 208/7
சால்ட் 54
ரசல் 64
சன் ரைசர்ஸ் 204/7
கிளாசன் 63
ஆட்டநாயகன் - ரசல்

செவ்வியின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

"ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடம் நடைபெறும். அந்தத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் நான் இன்னமும் முடிவு எடுக்கவில்லை. என்னைப் பொது வேட்பாளராகப் போட்டியிடுமாறும் சிலர் பரிந்துரைத்துள்ளனர். அதேவேளை, மொட்டுக் கட்சியில் ஜனாதிபதி வேட்பாளர் களமிறங்குவாரா? இல்லையா? என்பது தொடர்பில் என்னால் பதில் கூற முடியாது. அது தொடர்பில் அந்தக் கட்சியின் தலைமையிடம்தான் கேட்க வேண்டும் என்றார். (ம-7)

## பிரதமர்...

பிரதமர்தினேஷ் குணவர்தன உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நாளை திங்கட்கிழமை சீனாவுக்கு செல்லவுள்ளார்.

சீனப் பிரதமரின் Li Qiang அழைப்பின் பேரில் பிரதமர் இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

பிரதமர்தினேஷ் குணவர்தனவிற்கும் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கிற்கும் இடையிலான விசேட சந்திப்பொன்றும் இதன்போது இடம்பெறவுள்ளது. (ம-7)

## வண்ணை...

இன்று காலை 10.09 முதல் 11.21 வரையுள்ள சுப வேளையில்அருள்மிகு ஸ்ரீதேவி பூமாதேவி சமேத ஸ்ரீ வேங்கடேச வரத ராஜப்பெருமாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் அழகிய இராஜ கோபுரங்களுக்கும் மகா கும்பாபிசேகம் நடைபெறவுள்ளதோடு தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிசேகமும் இடம்பெறவுள்ளது. (ம-7)

லங்கா மஹால் (PVT) LTD
உள்நாட்டு. வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு : 00919566156719
Western Union WU MoneyGram Ria
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
40,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 077 8393 974

## ஈஸ்டர்...

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்தியது யார் என்பது தனக்கு தெரியும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட கருத்து தற்போது சர்ச்சையாகியுள்ளது.

குறித்த கருத்து தொடர்பில் நேற்று குற்றப்புலனாய்வு திணைக்களத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தனவினால் இந்த முறைப்பாடு முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி மைத்திரியிடம் விசாரணை மேற்கொள்ள உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-7)

### மஹஜன சம்பத

திகதி 2024.03.23
சீட்டிழுப்பு இலக்கம் 5428
M 9 2 4 6 0 7

அத சம்பத: M 4 6 0 7
சீட்டிழுப்பு இலக்கம் 003

தேசிய லொத்தர் சபை National Lotteries Board

### தன நிதானய

திகதி - 2024.03.23
சீட்டிழுப்பு இலக்கம் - 1458
R 71 79 81 82 R
Double Chance 03415

### மெகா பவர்

திகதி 23/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1776
F 24 06 49 60 64
17571

### லக்கி 7 VIP

திகதி 2024.03.23
சீட்டிழுப்பு இலக்கம் 0254
X 5 5 5 4 1 8 X

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 3670
சீட்டிழுப்பு திகதி 23.03.2024
J 30 41 42 71
J 47371

### ஹந்தஹன HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.23
சீட்டிழுப்பு இலக்கம் 0737
கடகம் 21 23 35 44 கடகம்
28926 20

### சுபிரி வாசனா

உத்தியோகபூர்வ முடிவுகள்
23.03.2024 வெற்றி வாரம் 136 வர்ணம் நீலம்
M 4 8 6 7 8 1
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 31,769,720.00
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2402 வர்ணம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 23.03.2024 தினம் சனிக்கிழமை
47 52 57 75 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 79,927,195.20

### சனிதா

திகதி 2024.03.23 வெற்றி வாரம் 4563
24 29 31 54 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,970,418.00

### ராசி

சீட்டிழுப்பு வாரம் 4114 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.03.23 தினம் சனிக்கிழமை
15 16 44 49 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.13,482,714.40

### ஜயோதா

1578 சிவப்பு 23.03.2024 சனிக்கிழமை
T 39 09 50 54 63
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 513,658,844.60

### அட கோடிபதி ADA KOTIPATHI

சனிக்கிழமை
வெற்றி வாரம்: 2228 வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2024.03.23
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.101,290,400/-
08 09 42 67 A

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உங்கள் ஆலய திருவிழாக்களில்...

**(18.04.2024 வரை)**

ஈழநல்லூர் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்கு தொடர்பு கொள்ளலாம்.

கலைமாமணி DR.S.S. சர்மா(குருஜீ)

**075 99 811 77**

(183)

## IELTS 23.03.2024 New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes

இல.53, சிவகுருநாதர் வீதி,

**Brown Rd, Jaffna.**

**077 798 9830** By:-B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

O/L மாணவர்களுக்கான விசேட group ஆங்கில வகுப்புகள் ஆரம்பம்

(153)

## சண்முகா & சன்ஸ்

### மொத்த சில்லறை வியாபாரம்

### Shanmuga & Sons Whole Sales

திறப்பு விழா - 25.03.2024

மளிகைப் பொருட்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்யப்படுவதுடன் எரிவாயு சிலிண்டர்கள் இல்லங்கள் தோறும் சென்று விநியோகிக்கப்படும்.

Shanmuga sons

**074 121 3109**

Kali Kovil Road, Chavakachcheri.

காளி கோவில் வீதி, சாவகச்சேரி.

(209)

## PREGNANCY VOUCHER

கர்ப்பிணித் தாய்மாருக்கான Voucher இற்குரிய பொருட்களை இப்போது Happy Super market உரும்பிராயில் கொள்வனவு செய்யலாம் (வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகம்- பதிவுள்ளோர் மட்டும்) காலை 7 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை

Happy Super market - உரும்பிராய்

**077 780 8030**

(223)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## சாரதி தேவை

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.

சம்பளம்: 40'000/-

வயது: 21 முதல் 40 வரை

தொடர்புக்கு:-

**0777068777**

(C-8597)

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322

077 77 19 322

Visit Visas

Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**

வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-8597)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 2.0.7 டாட்டா(TATA) கேப் ரக வாகனம், ரக்ரர் பவுசர் (ரக்டருக்குரிய பவுசர் - 6500 லீற்றர் கொள்ளளவு) மற்றும் இரண்டு நீர் இறைக்கும் இயந்திரம் (waterpumps) விற்பனைக்கு உண்டு.

**077 626 1488**

(166)

## நாகபூஷணி திருமண சேவை

### இடமாற்றப்பட்டுள்ளது

திறந்திருக்கும் நேரம் (7.30 AM - 5.30 Pm)

10/2, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.(Bcas campus க்கு அருகாமை)

பொருத்தமான மணமக்கள் ஜாதகம் எம்மால் தெரிவு செய்து உடன் தரப்படும்

**077 138 7596, 071 999 9306**

(220)

## தேவை

கணனி தட்டெழுத்தாளர் தேவை.

**077 711 1212**

(0191)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH 30% *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

**T.P : 077 780 3970, 074 007 1970**

(19346)

## காணி விற்பனைக்கு

ஊரெழு மேற்கில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு 2 பரப்பு, 3 பரப்பாக பிரித்து தரப்படும். ஊரெழு பலாலி றோட்டில் இருந்து 300 - 400 m தூரம், நல்ல சூழல். விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

(0190)

**074 349 4087**

## HOUSE FOR RENT

**NEWLY BUILT MODERN 3 B/R HOUSE WITH GARAGE AND ROOF TERRACE IN CLOSE PROXIMITY TO JAFFNA UNIVERSITY ON KUMARASAMY ROAD**

**AVAILABLE FOR RENT FOR A FAMILY FROM APRIL 2024**



**074 028 8017**

1-647 822 0973(WHATSAPP - CANADA)

(156)

## காணி விற்பனைக்கு

யாழ் பலாலி விமான நிலையத்தில் இருந்து 1 Km தூரத்தில் மயிலிட்டி K.K.S கரையோர காப்பட் பாதையிலிருந்து 3 ஆவது காணி விற்பனைக்கு உண்டு. 11 பரப்பு

விலை : பரப்பு 19 இலட்சம்

தொடர்புகளுக்கு :

**074 234 3241**

(0120)

## தேவை

பிரபலமான தனியார் கல்வி நிறுவனத்திற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.

தொடர்புகளுக்கு :

**074 056 7791**

(0129)

## பராமரிப்பாளர் தேவை

ஆதரவற்ற அரச ஊழியரை உணவு அளித்து பராமரிப்பதற்கு கணவனை இழந்த, தனித்து வாழும் பெண் பராமரிப்பாளர் தேவை.

உணவு, இருப்பிடம், 2 பரப்புக் காணி இலவசமாக வழங்கப்படும்.

**077 882 3330**

**077 880 4503**

**076 701 3330**

(055)

## தேவை

பணிப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு :

**077 069 8105**

(0163)

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 265 /= | Max 3Kg | |
| 1 Kg றவை | - 288 /= | | |
| 1 Kg Prima கோதுமை | - 187 /= | | |
| 1 Kg சம்பா | - 230 /= | Max 5Kg | |
| 1 Kg தீட்டல்பச்சை | - 165 /= | | |
| 1 Kg அரிசி மா | - 200 /= | | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 288 /= | | |
| 10 Kg விஜிதா நாடு | - 1940 /= | | |
| 450g நெஸ்டமோல்ட் | - 780 /= | | |
| 01 Lux, lifeboy சவர்க்காரம் | - 145 /= | ~~160/=~~ | |
| 750ml New VSP நல்லெண்ணை | - 1455 /= | ~~1550/=~~ | |
| 70g Baby Soap | - 115 /= | ~~145/=~~ | |
| 750g சுபோஷ மா | - 550 /= | ~~590/=~~ | |
| 180ml Chick சம்போ | - 390 /= | ~~480/=~~ | |
| 01 அங்கர் யோக்கட் | - 54 /= | ~~80/=~~ | |

Anchor 1045/= ~~1110/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

Happy Supermarket 077 780 80 30

(223)

## RE/MAX ELITE CHUNNAKAM

### RE/MAX ELITE சுன்னாகத்தில் வீடு, காணி விற்பனைக்கு

- இராமநாதன் வீதி, குமாரசாமி றோட்டில் 1 1/2 பரப்பு காணிக்குள் நவீன வசதியுடன் கூடிய கீழ் வீட்டுடன் கூடிய 3 மாடி வீடு.
- வசாவிளான் 137 பரப்பில் சோலர் வசதியுடன் மற்றும் சோலர் மின் உற்பத்தி நிலையத்துடன் விவசாய பண்ணை விற்பனைக்கு.
- மானிப்பாய் வீதி முகப்புடன் ஐந்து சந்தியில் கடையுடன் கூடிய காணி விற்பனைக்கு.
- சுன்னாகத்தில் பிரத்தியேக பாவனைக்கு அலுவலக அறைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

**077 744 1113, 021 224 2855**

**No.115, K.K.S Road, Chunnakam.**

(188)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.